ஒளி : 04 கதிர் : 01 2025 - ஜனவரி - மார்ச்

அவிர் 13

கலை இலக்கிய முத்திங்கள் இதழ்

350/=

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு

2025.01.05 எமது அமைப்பின் மாநாட்டு நிகழ்வுகள் நிழல்களாக....

அவரி 13

ஆற்றல் உள்ள பெண்கள் அமைப்பான SRILANKA PEN CLUB முத்திங்கள் வெளியீடு

ஒளி : 4 கதிர் : 1 2025 – ஜனவரி – செப்டெம்பர்

ஆசிரியர் குழு

நிர்வாக ஆசிரியர். **சம்மாந்துறை மஷூறா.**

இதழாசிரியர் **முப்லிஹா பிர்தவ்ஸ்**

செயற்குழு

ஷாமென் நிஸாம்டீன் – கட்டுகஸ்தோட்டை.
வஃபீரா வஃபீ – கொழும்பு.
அறபா மன்சூர் – கண்டி.
எம்.பி.பர்சானா – நிந்தவூர்.
சுஸானா முனாஸ். – மூதூர்.
அஸ்மா தீன் – கம்பளை
மர்ளியா சக்காப் – திருகோணமலை.
பாரா தாஹிர். – மாவனெல்ல.
ஹகீமா அமீனுதீன். – ஓட்டமாவடி.
மிஸ்ரியா அமீன். – கிண்ணியா.
ஜெஸீனா நிஸ்றீன். – சாய்ந்தமருது.
லரீபா பதூர்தீன். – கலேவல.
நௌஷா ஜமால்தீன். – சம்மாந்துறை.
றம்ஸானா ஸமீல். – அக்கரைப்பற்று.
பானு ஜிப்ரி. – சாய்ந்தமருது.

நிர்வாக அலுவலகம்

மஷூறா மஹால்,
4/C/5/ லேக் வீதி, மருதமுனை.
0765363434 / 0770696559 / 0672261044

ISSN- 2961-5194

தூரநோக்கு

கலாசாரத்தின் ஊடாக கலை இலக்கியங்களை கட்டி எழுப்புவதும் ஆற்றல் உள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்

நோக்க கூற்று

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் களங்கள் அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்

SRILANKA PEN CLUB கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்.
Sri Lanka pen club ///

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா...
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி...

கலைகளும் செய்வோம் சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு...
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்...

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை...
கலாசார மீறல்க ளற்றதோ ருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்...

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்..
சிதைத்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்...

பாடலாக்கம் : சம்மாந்துறை மஷ்ஹூறா

அவரியின் உள்ளே...

1. வேலியே பயிரை மேயும் - ஹாஜரா கலீலுர் ரஹ்மான்
2. தடுமாற்றங்கள் - மஷ்ஹூறா சுஹூறுத்தீன்
3. கொடித்தோடை செய்கை - முர்ஷிதா ஷிரீன்
4. இதுவும் கடந்து போகும் - றம்ஸானா ஸமீல்
5. நெகிழி ஓர் உயிர் கொல்லி - கதீஜா ஜனூன்
6. என் இனிய தனிமையே - சுமையா ஜெஸ்மி மூஸா
7. வாய்ச்சுகாதாரமும் நாமும் - டாக்டர் பர்வீன் ஏ. காதர்
8. ககனத்தில் உதயமாகும் தாரகைகள் - மிஸ்ரியா அமீன்
9. நேர்காணல் - ஷாமென் நிஸாம்டீன்
10. தனிமையில் இனிமை - அறபா மன்ஸூர்
11. வட்ஸ்அப் - ஹகீமா அமீனுதீன்
12. எதிர்மறை எண்ணங்கள் - **R.R.F.** சஸ்னா
13. சந்தேகம் - எஸ். பாயிஸா அலி
14. எதிர்காலத் தலைவனுக்கு - மர்ளியா ஸக்காப்
15. இன்றைய கல்விமுறையும் மாணவர் எதிர்நோக்கும் சவால்களும் - கஸ்பியா வீவி
16. மொழிபெயர்ப்புக்கவிதை - ஷிஃபானா அஸீம்
17. ஷுஹதாக்கள் அவர்கள் - சஞ்சீதா முஜீப் ரஹ்மான்
18. இயற்கை அனர்த்தங்களும் இஸ்லாமும் - **S.U.** கமர்ஜான் பீபீ
19. போனும் ஒரு போதைதான் - நுஸ்ரா லியாகத் அலி
20. யொகாரி சட்டகம் - ஜெனிதா மோகன்
21. நன்றி தெரிவித்தல் - 2025 மாநாட்டு நிழல்கள்

நிர்வாக ஆசிரியரின் செய்தி

நான்காவது ஆண்டின் முதலாவது இதழில் சந்திப்பதையிட்டு மிகுதியான மகிழ்ச்சி.

அனர்த்தங்களும் அவஸ்தைகளும் மனித இயல்பு வாழ்வைப் புரட்டிப் போட்டாலும், அனைத்து செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. அவ்வப்போது வரும் தடைகளால் சில தாமதங்களேற் பட்டாலும், இயல்பு வாழ்வும் திரும்பியே விடுகிறது.

திட்டமிட்டபடி எமது SLPC யின் நான்காவது மாநாடு, வெள்ள அனர்த்த சூழ்நிலை காரணமாக 2024 டிசம்பர் 7 ல் நடைபெறாவிட்டாலும், 2025 ஜனவரி 5 ல் மிகவும் நேர்த்தியாக நடந்து முடிந்தமை,மிகவும் மகிழ்ச்சியான விடயமே.

சில தாமதங்கள் கூட எமக்கு சாதகமாகி விடுகின்றன என்பது மகிழ்ச்சியான விடயமும்தான். எண்பது அங்கத்தவர்களுக்கு மேல் பங்கு கொண்ட மாநாட்டில், தகுதி வாய்ந்தவர்கள் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இவ்வாண்டில் முற்றிலும் மாறுபட்ட ஒரு ஒன்று கூடலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.பன்ரெண்டாவது அவரி மாநாட்டு சிறப்பிதழாக அனைத்து அங்கத்தவர்களதும் விபரக் குறிப்புகளுடனும், ஆய்வுக் கட்டுரைகளுடனும் வெளிவந்தது. அவரி 12 உருவாக்கத்தில், மிகவும் அவஸ்தைப்பட்டுப் போனோம். சஞ்சிகை வெளியீடொன்றை நினைத்தும் பார்த்திரக்கூடாத எண்ணங்களைக் கடந்து, 13 வது அவரியை முன்வைத்திருக்கிறோம்.

எமது அங்கத்தவர்க ளுக்கு மட்டுமே களம் கொடுக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அவரி சஞ்சிகை, இவ்வாண்டு முதல் SLPC க்கு வெளியேயுள்ள அனைத்து தமிழ், முஸ்லிம் பெண் எழுத்தாளர்களும் எழுதலாம்.

இந்த அவரி 13 சஞ்சிகையின் ஆசிரியராய்ப் பொறுப்பெடுத்திருக்கும் காத்தான்குடி முப்லிஹா பிர்தவ்ஸ், எமது அமைப்பின் இணைச் செயலாளரும்கூட. பல்வேறு இலக்கிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர். பொறுப்பெடுக்கும் காரியங்களை அலட்சியம் செய்யாது, செவ்வனே நிறைவேற்றும் திறன் கொண்டவர்.

காத்தான்குடி ஜாமியுழ் ழாபிரீன் வித்தியாலயத்தின் பிரதி அதிபரும்கூட. தனது கல்விப் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றவர்.

மனனமாக்கும் பாடங்களை, பாடலாக்கும் செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றவர். முப்லிஹாவின் அயரா முயற்சியில் இவ்விதழ், உங்கள் கரங்களில் மலர்ந்திருக்கிறது. எழுதுங்கள். ஆதரியுங்கள்.விமர்சியுங்கள்.

அன்புடன்

இலக்கிய வித்தகர்

சம்மாந்துறை மஷூறா.

ஆசிரியர் உரை....

பிஸ்மில்லாஹ்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ.

அவரி 13 வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாடளாவிய ரீதியிலான முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைக் கொண்டது எமது சிறீலங்கா பென் கிளப் அமைப்பு. பெண் எழுத்தாளர்களின் எழுத்தாளுமையை மென்மேலும் வளர வைக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டது இந்த அவரி சஞ்சிகை. இம்முறை வெளியில் உள்ள பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்களும் உள்ளடங்குகின்றன.

இலக்கியங்கள் மூலம் சமூகத்திற்கு பிரயோசனமான ஒன்றை முன்வைக்க வேண்டும் என்பது எனது அவா. அந்த வகையில் இந்த அவரி சஞ்சிகையானது பல்வேறு விதமான தகவல்களையும் தாங்கியதாக வெளிவந்திருப்பது சிறப்பாக உள்ளதாக நினைக்கிறேன்.

ஒரு பெண்ணைச் சுற்றிலும் பல்வேறு பொறுப்புக்கள் உள்ளன. குடும்பத்தையும் தாண்டி அவள் ஏனைய செயல்பாடுகளில் ஈடுபடும் பொழுது எல்லா விடயங்களையும் சமநிலையாக கையாள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறாள். இதுவரை அவரியை வெளியிட்ட இதழசிரியர்களின் முன்மாதிரியை நான் பாராட்டுகின்றேன். அவ்வகையில் எனக்கு வழிகாட்டிய அமைப்பின் தலைவி.. அவர்களுக்கும் இச்சஞ்சிகையை வடிவமைப்பதில் எனக்கு உதவிய என்னுடைய கணவருக்கும் குறித்த காலத்திற்குள் ஆக்கங்களை அனுப்பிவைத்த சகோதரிகளுக்கும் நான் என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

என்றும் அன்புடன் **முப்லிஹா பிர்தவ்ஸ்.**

(அவரி-13 இதழாசிரியை)

வேலியே பயிரை மேயும் விசித்திரம்

இன்று பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள் என அத்தனை ஊடகங்களிலும் வெளிவரும் செய்திகளில் மிகவும் பிரதானமாக இடம் பிடித்து நிற்பது துஷ்பிரயோகம் ஆகும்.

துஷ்பிரயோகம் எனப்படுவது

"தனக்கோ பிறருக்கோ உடல், உள பாதிப்புகள் ஏற்படும்படி செயற்படுதல் அல்லது பாதிப்புகள் ஏற்படும் போது அதை தடுக்காமல் இருத்தல் "ஆகும்.

துஷ்பிரயோகம் இரண்டு வகைப்படும்

1. தன்னைத்தானே துஷ்பிரயோகம்செய்தல்.
2. தனது சுய தேவைக்காக பிறரை துஷ்பிரயோகம் செய்தல்.

தன்னைத் தான் துஷ் பிரயோகம் செய்தல் என்பது தனக்குத்தானே தீங்கு விளைவித்தலாகும். மது பாவனை, போதை பொருள் பாவனை மூலம் தன்னைத்தானே அழித்தல், தன்னைத் தானே தடிகள் அல்லது சாட் டைகளால் அடித்து துன்புறுத்தல் அல்லது கூரிய ஆயுதங்களால் உடலில் கீறிக் கிழித்து புண்படுத்தல் போன்றவை இத்தகைய துஷ்பிரயோகத்தில் அடங்கும்.

தனது சுய தேவைக்காக பிறரை துஷ் பிரயோகம் செய்தல் என்பது

ஒருவர் தனது சுய தேவை, சுய இச்சை, சுய இன்பம் என்பவற்றை தணித்துக் கொள்வதற்காகவும், அல்லது அதிகாரம் ஆணவம் என்பவற்றை அடுத்தவர்கள் மீது திணிப்பதற்காகவும் குறிப்பிட்ட நபர்களால் மேற்கொள்ளப்படுவதாகும்.

இத்தகைய துஷ்பிரயோகம் ஒருவருக்கு எந்த வயதிலும் ஏற்படலாம். எனினும் பெரும்பாலும் சிறுவர்களே இதற்கு ஆளாகின்றனர். சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு உடை, உறையுள், பாதுகாப்பு, அன்பு, கணிப்பு, அரவணைப்பு போன்றவை மறுக்கப் படுதல், அவர்கள்

உரிமை மறுக்கப்படல், தண்டித்தல், பாலியல் கொடுமைக்குள்ளாதல் போன் றவற்றால் அவர்களின் உடலும் உள் ளமும் பாதிப்புக் குள்ளாக்கப்படுகின்ற அத்தனையும் துஷ்பிரயோகம் என்றே கருதப்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகத்தினை பின்வரும் வகையில் வகைப் படுத்த முடியும்.

- உடல் ரீதியான துஷ்பிரயோகம்.
- உள ரீதியான துஷ்பிரயோகங்களும். பாலியல் ரீதியான துஸ்பிரயோகம்.
- உரிய வயதை அடையும் முன் பெரியவர்களின் பொறுப்புக்களை அவர்கள் மீது திணித்தல்.

இத்தகைய துஷ்பிரயோகங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புற்றவையாகக் காணப்படுகின்றன. உடல் ரீதியாக துஷ்பிரயோகத்தை அனுபவிக்கும் பிள்ளை மனவெழுச்சிப் பாதிப்புக்கு ஆளாகின்றது. அவ்வாறே அன்பு, காப்பு, கணிப்பு போன்றவை நிராகரிக்கப்படும் குழந்தை கள் பயம், பதற்றம், கவலை போன்றவற்றுக்கு ஆளாவதுடன், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப் பட்டவர்கள் உடல் ரீதியான, உள ரீதியான பாதிப்புகளுக்கும் ஆளாகின்றனர்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் முதிர்ந்தவர் ஒருவர் பாலியல் இன்பம் பெறு வதற்காக சிறுவர்களை பயன்படுத்தலும், உடல் உறவினாலோ அல்லது வேறு முறைக ளினாலோ பாலியல் கிளர்ச்சியை ஏற் படுத்த முயல்வதாகும். இது சட்ட விரோ தமான ஒழுக்கவீனமான மிகக் கேவலமான செயற்பாடாகும். இங்கேதான் மனித மிரு கங்களை கண்கூடாக கண்டு கொள்ள முடிகிறது.

பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் என்ற வகையில் பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்.

- உடலை ஆசையோடு தொடுதல் அல்லது வருடுதல்.
- கண்ணியமற்ற முறையில் நிர்வாணமாக காட்சியளித்தல்.
- பாலியல் உறுப்புகளை சிறுவர்களை கட்டாயமாக பார்க்க வைத்தல்
- பாலியல் சார்ந்த புகைப்படங்களை எடுத்தல்
- பாலியல் உடலுறவுக்குட்படுத்துதல்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை களில் மாணவர்கள் அல்லது சிறுவர்களுக்கு துஷ்பிரயோகம் நடைபெறுவது மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். வேலியே பயிரை மேயும் விசித்திரம் இங்கே தான் அரங்கேறுகின்றது. மாணவர்கள், சிறுவர்களுக்குஉடல்ரீதியானதண்டனைகள் வழங்கப்படுவது இன்று தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டாலும் அத்தகையை செயல்பாடுகளும் இதில் நடைபெறாமல் இல்லை.

அடித்துத் திருத்துவது மிருகங்களை தான். அவ்வாறே அந்த வரையறைக்குள் சில மாணவர்களும் உள்வாங்க பட் டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே மாணவர்களை வளர்ப்பதும் வழி காட்டுதலும் பெற்றவர்களில் இருந்து சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் ஆசிரியர்களால் அவர்களை நல்ல முறையில் கையாண்டு கற்பிக்கவும் வழிநடத்தவும் முடியும்.

சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப் படுகின்ற இன்றைய சூழ்நிலையில் மாண வர்களுக்கு வழங்கப்படுகின்ற உடலியல் ரீதியான தண்டனைகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனாலும் இன்னொரு புறம் மாணவர்கள் பாலியல் ரீதியாக

துன்புறுத்தப்பட்டு துஷ்பிரயோகப் படுத்தப் படுகின்றனர்.

பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டிய பிள்ளைகளின் வாழ்க்கையும் மகிழ்ச்சியும் பெரியவர்களால் பிய்த்தெறியப்படுகின்றது. பிள்ளைகளைத் தகப்பன் போல கண் காணிக்க வேண்டியவர்கள் தப்பானவர் களாக மாறி அவர்கள் வாழ்வை அழிப்பது டன் தங்களுக்கு தாங்களே கரிபூசியும் கொள்கின்றனர்.

இந்த வகையில் அதிபர்கள், ஆசிரி யர்கள், அலுவலகப் பணியாளர்கள், காவலாளிகள், வீதியில் செல்பவர்கள் ஆங்காங்கே சிறு வியாபாரங்களில் ஈடு படுவோர், சிற்றுண்டிசாலை உரிமை யாளர்கள் என இவ்வீனத்தனமான செயற் பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இதில் வயதில் இளையவர்கள் பக்குவமாக நடந்து கொள்ளும் அதே வேளை சிரேஷ்ட மானவர்களே தனது சாகசங்களை கட்ட விழ்த்து விடுகிறார்கள்.

பாடசாலைகளில் மாணவர்களிடம் ஆபாசமான இரட்டை அர்த்தங்களில் பேசுவது, அதிகரிசனை காட்டுவது போன்று தன்னை காட்டிக்கொண்டு பிழையான தொடுகைகள், இம்சைகளில் சில்லறைத் தனமான, சில்மிஷங்களில் ஈடுபடுதல், மேலதிகவகுப்பு, பிரத்தியேகவகுப்புபோன்ற செயற்பாடுகளுக்கு மாணவர்களை தனியே அழைத்து அவர்களை தொட்டு தடவி கட்டி அணைத்து தனது இச்சைகளை தணித்துக் கொள்ளல் போன்ற சில கேடுகெட்ட செயற்பாடுகளில் சில ஆசிரிய சேவையில் தவறாக வந்து இடறி விழுந்தவர்களும் ஈடுபடுகின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் பாடசாலை அதி பர்கள் கூட மாணவர்களுக்கு பொறுப் புக்களை வழங்குதல் என்னும் பேரில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடு கின் றார்கள். இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் சிறை சென்ற வரலாறுகள், சம்பவங்கள் எம் இலங்கை திருநாட்டின் புள்ளி விவரங்களில் பதிவாகி சான்று பகர்ந்து நிற்கின்றன.

இத்தகைய பாரதூரமான செயல்க ளில் ஈடுபடுபவர்கள் 40 வயதுக்கு மேற் பட்டவர்களே என்று ஆய்வுகளில் குறிப் பிடப்பட்டுள்ளன. இல்லற வாழ்க் கையில் தன்னிறைவு காணாதவர்கள், தாரமிழந்தவர்கள், தாரங்களால் தூர மாக்கப்பட்டவர்கள், நெறிபிறழ்ந்தவர்கள் போன்றவர்கள் இச்செயற்பாடுகளில் ஈடு படுவது வரலாற்றில் காண முடிகின்றது.

உலகில் நடைபெறும் பெரும்பாலான துஷ்பிரயோகங்கள் குடும்ப உறவுகளாலும், நெருங்கிய உறவுகளாலும், உடனிருப்ப வர்களாலும், உரிமை உள்ளவர்களாலும், நம்பிக்கைக்குரியவர்கள் என்று நம்பி நடந்தவர்களாலும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. தான் பெற்ற பிள்ளையையே தகப்பனானவன் துஷ்பிரயோகம் செய்யும் பரிதாபகரமான இந்த காலகட்டத்தில் இத்தகைய துஷ்பிரயோகங்களில் இருந்து இளம் சந்ததியை பாதுகாப்பது காலத்தின் தேவையும் சமூகத்தின் பொறுப்பு ஆகும் .

எனவே பிள்ளைகளுக்கு துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அந்த வகையில்

- பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்துதல்
- பாடசாலை ஆசிரியர்கள் தங்களது மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் நம்பிக்கைகுரியவர்கள்விழிப்புணர்வூட்டடல்.

- பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நட்புடன் பழகுதல்
- ஆசிரியர்கள் மாணவர்களுடன் நட்புற வுடன் பழகுதல்.
- சரியான தொடுகை, பிழையான தொடுகை போன்ற வழிகாட்டல் விழிப் புணர்வை பிள்ளைகளுக்கு இளம் பருவத்தில் இருந்தே ஏற்படுத்துதல்.
- பிள்ளை இம்சிக்கப்படும் போது, பிழையான தொடுகைக்கு உட் படுத்தப்படும் போது அதை தெரியப் படுத்தும் துணிச்சலை ஏற்படுத்துதல்.
- பிள்ளைகளின் நடத்தைகளை அன் றாடம் பெற்றோர்களும் ஆசிரியர்க ளும் கண்காணித்தல்.
- மனம் திறந்து பேச பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் அளித்தல்.
- பெண் பிள்ளைகள் மட்டுமின்றி ஆண் பிள்ளைகளுக்கும் துஷ்பிரயோகம் சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

அதிகமான பிள்ளைகள் தமக்கு ஏற்பட்ட பாதகங்களை வெளியே சொன்னால் சமூகத் தில் அவமானங்களையும் கேவலங்களையும் சுமக்க வேண்டிவரும் என்று பயந்து வெளியே சொல்லாமல் தனக்குத்தானே மறைத்து மனம் புழுங்கி மன அவலங்களுக்கு உள்ளாகி இருப்பதைக் காண முடிகின்றது.

மாணவர்கள் பாடசாலைக்கு தொடர்ச்சி யான லீவு, இடைவிலகல், பாடசாலைக்கு செல்ல முடியாது என்று அடம் பிடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதும் இத் துஷ்பிரயோகங்களின் பிரதிபலிப்பு களேயாகும்.

சற்று நேர சபலங்களுக்கும் சொற்ப நேர சலனங்களுக்கும் அடிமையாகி, சமூகத்தில் கண்ணியமாக போற்றப்பட வேண்டிய ஆசிரியர்கள் கால் தூசுக்கும் பெறுமதி இல்லாதவர்களாக மதிப்பிழந்து கேவலப்படுத்தப்படும் நிலையில் இருந்து விடுபட அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் விழிப்புணர்வூட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர்களை தாம் காணா உயரத்துக்கு ஏற்றி விடும் ஏணியும் தோணியும் போன்றவர்கள். மாணவர்கள் வெற்றி பெறும் போது கை தட்டி தூக்கிவிட்டு, தோல்வி அடையும் போது தோள் தொட்டுத் துயர் நீக்குபவர்கள் ஆசிரியர்கள் மட்டுமே.

மாணவர்களின் ஆசு களைந்து மாசு மறுவற்ற வாழ்வுக்கு வழிகாட்டும் மகாத்மாக்கள் அவர்கள் .ஆனாலும் ஒரு சிலரின் ஈனச் செயல்களால் ஒட்டு மொத்தஆசிரியர் சமூகத்திற்கும் தலைகுனிவு ஏற்படுகிறது .

இத்தகைய கேவலமானசெயற்பாடுகளில் ஈடுபடுவோரை உடனுக்குடன் சமூகத்துக்கு இனங்காட்டி உரிய தண்டனைகளைப் பெறச் செய்வதுடன் ஏனைய மாணவர்களையும் இத்தகைய அநியாயங்களில் இருந்து பாது காப்பது அத்தியாவசியமாகும்.

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்

காத்தான்குடி.

தடுமாற்றங்கள்

நஸ்ருதீன் மிகவும் சுறு சுறுப்பானவன். குறும்புகளும் குழப்பங்களும் செய்து கொண்டேயிருப்பான். எட்டு வயதாகிறது. மூன்றாம் வகுப்பில் படிக்கிறான். அவனுடைய தாத்தா இனிய சுபாவம் உடையவர். அவருக்குப் பற்கள் கிடையாது. நஸ்ருதீன் மீது அவருக்குப் பாசம் அதிகம். ஆனால் நஸ்ருதீனுக்கு தாத்தாவின் மூக்குக் கண்ணாடிமீது பாசம். அடிக்கடி அதை மறைத்து விடுவான். தாத்தா மூக்குக் கண்ணாடிக்காக திண்டாடும் போது கைகொட்டிச் சிரிப்பான்.

அன்று தாத்தாவின் கண்ணாடியை மேசைமீது கண்டுவிட்டான். அவன் கையில் பந்து இருந்தது. கண்ணாடியைக் குறி வைத்து வீசினான். அது நொறுங்கியது. அப்பா திட்டினார். தாத்தா தடுத்தார்.

சின்னப் பையன்தானே... திட்டாதீங்க மகன். என்றார்.

பின்னர் வாப்பா திட்டவில்லை. கண்ணாடி உடைத்ததை சாதனையாக கருதினான். மறுநாள் பாடசாலை கலைந்து வீடு வந்தான். வீட்டுப் படியில் நின்று தாத்தா அவனை வர வேற்கவில்லை. அவனுக்குக் கவலையும் கோபமும் வந்தது.

தாத்தா எங்கே உம்மா...

என்று கேட்டான்.

தாத்தாவின் கண்ணாடியை உடைத்து விட்டாயே... கண் ணாடியில்லாமல் நடக்க தடு மாறிக் கொண்டிருக்கிறார். போய்ப் பார் என்றார்.

நஸ்ருதீன் புத்தகப் பையைக் கதிரையில் வீசினான். தாத்தாவைத் தேடினான். அவர் நிலத்தைத் தடவி எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

என்ன தாத்தா தேடுறீங்க எனக் கேட்டான்.

என்ட வெத்திலப் பொட்டியக் காண லடா. எடுத்துத் தாறியா?

நஸ்ருதீன் எடுத்துக் கொடுத்தான். தாத்தா எழுந்து கழிவறைக்குப் போனார். கதவு தெரியவில்லை. சுவரைத் தடவினார்.

என்ன தாத்தா. தடவுறீங்க...நஸ்ருதீன் கேட்டான்.

பாத்ரூம் கதவ காணலியேடா...என்றார்.

அது இருந்த எடத்திலதான் இருக்கு. நீங்க ஏன் தேடுறீங்க? என்றான்.

கண்ணாடிய உடைச்சிட்டியேடா குட் டிப் பயலே... அதான் கண்ணு தெரியல... என்றார் தாத்தா.

அவருக்கு உதவ விரும்பினான். கதவை காட்டிவிட்டான். உள்ளே நுழைந்த தாத்தா அலறினார்.

என்ன தாத்தா.... என்று விழுந்தடித்து ஓடினான்.

கக்கூஸ் குழிக்க கால உட்டுட்டன்டா மனே... என்று அழுதார். அவனுக்கு சிரிப்பு வரவில்லை. தன்னால்தானே என நினைத் துக் கவலைப்பட்டான். உம்மாவைக் கூட்டி வந்தான். தாத்தாவின் கையைப் பிடித்து நடத்தினான். அவரால் நடக்க முடியவில்லை.

உம்மாவும் உதவினார். கட்டிலில் உட் கார வைத்தான். சறுக்கியதில் தாத்தாவின் கால் வீங்கத் தொடங்கியது.

ஒரு வாரகாலமாக தாத்தா நடக்க வில்லை.

அவன் கவலைப்பட்டான்.

அவனை உம்மா சாப்பிட அழைத்தாள். சாப்பிட மனம் வரவில்லை. மறுத்து விட டான். வாப்பா அவனை விசாரித்தார்.

தாத்தாவுக்கு மூக்குக் கண்ணாடி வாங் குங்க வாப்பா.

ஐந்தாயிரம் வேணும் மகன். காசுக்கு எங்க போவன்? என்று கவலைப் பட்டார் தந்தை. நஸ்ருதீன் பேசவில்லை.

ஏன் மகன் யோசிக்கிறீங்க என வாப்பா கேட்டார்.

எனக்கு ஒரு நாளைக்கு பொக்கட்மணி நாற்பது ரூபாய் தாறீங்க. அத சேர்த்தா 5000 ஆக எவ்வளவு காலம் ஆகும் வாப்பா?

நாலு நாலர மாசமாகும்.

அது வரையில தாத்தா எப்படி சமாளிப்பாரு....? பொக்கட்மணிய சேர்த்தா நீங்க எத சாப்பிடுவீங்க?

எனக்கு ஸ்கூல் சாப்பாடு போதும் வாப்பா. நானும் உண்டியலில சேர்க்கன்.

நீங்களும் சேருங்க வாப்பா என்றான் நஸ்ருதீன்.

மறுநாள் யோசனையோடு பாடசாலை போனான். வரும்போது மகிழ்ச்சியோடு திரும்பினான். வாப்பா வயலிலிருந்து திரும் பியிருக்கவில்லை. சாப்பிடாமல் வாப் பாவைக் காத்திருந்தான்.

உங்கட மகன் இன்னும் சாப்பிடல்ல. வாப்பா வந்ததும் ஒரு விசயம் கேக்கணும். அப்றம் சாப்பிர்ரன்னு சொல்லிட்டிருக்கார். உம்மா விண்ணப்பித்தார்.

ஏன் மகன் உம்மா சொல்றது உண்மையா? என்று வினவினார் தந்தை.

வாப்பா நான் ஒரு விசயம் கேட்பன்.நீங்க மறுத்தா நான் சாப்பிடமாட்டன் என்றான். வாப்பா சிரித்தார்.

நம்மட ரபீக் மாமா ரோஷனுக்கு சைக்கிள் வாங்கப் போறாராம். புதுசு வாங்க வசதியில்லயாம். நான் ஸ்கூல் விட்டு மாமா ஊட்டுக்குப் போய் கேட்டன். நாலாயிரம் தருவாராம். விக்கவா வாப்பா....

வாப்பா திரும்பவும் சிரித்தார்.

நீங்க பைக் இல்லாம ஸ்கூல் போறது சிரமமில்லயா மகன்?

முன்பெல்லாம் நடந்துதானே போனன்...

இப்பவும் நடப்பன்...என்றான்.

பைக் விக்கிறது கவலயில்லயா மகன்?

இல்ல வாப்பா.என்னாலதான் தாத்தா கஷ்டப்படுறார். தாத்தா பாவமல...?நான் விக்கிறன்... வாரியணைத்து உச்சி முகர்ந்தார் தந்தை.

என் பிள்ளை எவ்வளவு பொறுப்பா நடந்துக்குறான்

தவறை உணர்கிறான். தவறுக்கு பரிகாரமும் தேடுகிறான். தியாகம் செய்கிறான்.... மாறி மாறி. அவனை முத்தமிட்டார். மாமாவை அழைப்பித்து. பைக்கை கொடுத்து பணம் வாங்கினான். அதனை உம்மாவிடம் கொடுத்து வைத்தான். பக்கட் மணிகளை சேகரித்தான். இரண்டு வாரங்களின் பின் உண்டியலை கொட்டி எண்ணிப் பார்த்தான்.

வாப்பா இதில 560/- ரூபாயிருக்கு.பைக் வித்தது நாலாயிரம்....இன்னும் எவ்வளவு சேர்க்கணும் வாப்பா...?

இனி நீங்க சேர்க்க வேண்டியதில்ல மகன். உம்மாவும் உங்களுக்காக சேர்த்து வச்சிருக்காங்க மகன்...

..மெய்யாவா உம்மா..? எவ்வளவு வச்சிரிக்கீங்க...?

நான் டெய்லி அம்பது ரூபா சேர்த்தன். பதினாலு நாள் எவ்வளவு வரும். கணக்குப் பாத்து சொல்லுங்க. கல்குலேட்டர் யூஸ் பண்ண வாணாம்...

கலண்டர் தாளை களற்றினான்.பெருக்க சிரமப்பட்டான்.

உம்மா...எழுநூறு சரியா..?

என்ட தங்கம் கணக்கிலயும் கெட்டி.. உம்மாவிடம் எழுநூறு... உங்க கிட்ட ஐநூற்றி அறுபது...

ரெண்டும் சேர்த்து எவ்வளவு மகன்?

கொஞ்சம் பொறுங்க வாப்பா...எழு திட்டு கூட்டுறன். பூச்சியமும் பூச்சியமும் பூச்சியம்... ரெண்டு... ம்.. ஐந்து... 5200/ வாப்பா. அய்... இருநூறு ரூபா மிச்ச மிரிக்கி....மீதிக்கு ஐஸ்கிரீம்...

தந்தையுடன் கடைக்கு சென்றான்.ஐஸ்கிரீமை மறந்து மீதி இருநூறு ரூபாய்க்கு தாத்தாவுக்கு புதிய வெற்றிலைப் பெட்டி வாங்கி வந்தான்.தாத்தாவிடம் கொடுத்தான். தாத்தா பொக்கை வாய் திறந்து சிரித்தார். அவன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தான்.

இனிமேல் நான் குறும்பு செய்ய மாட்டேன் தாத்தா என்றான்.

குறும்பு செய்டா மனே. குழப்படி செய்யாதே என்றார் தாத்தா. கண்ணாடியை அணிந்து கொண்டு தடுமாறாமல் நடந்தார். அவனது தடுமாற்றமும் அகன்றது.

சம்மாந்துறை மஷ்றா.

கொடித் தோடை செய்கை

இது பிரேசிலில் தோற்றம் பெற்ற பசிபுளோரசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பயிராகும்.

வருடம் முழுவதும் பரவலாக மழை பெய்கின்ற ஈர வலயத்திற்கே மிகவும் பொருத்தமான பயிராகும். என்றாலும் உலர், இடை வலயங்களில் செய்கை பண்ணு வதாயின் வரட்சியான காலங்களில் நீர்ப்பாசனம் அவசியம் ஆகும்.

PH 6 - 7.5 உடைய நன்கு நீர் வடிகின்ற மணல் தன்மையான இருவாட்டி மண், களித் தன்மையான இருவாட்டி மண் என்பன பொருத்தமாகும்.

நடுகை பொருட்கள்:
விதை
தண்டுத் துண்டம்
ஒட்டுதல்

சிபாரிசு செய்யப்பட்டுள்ள வர்க்கங்களும் அதன் இயல்புகளும்

மஞ்சள் வர்க்கம்:
மஞ்சள் நிறமான பெரிய பழம்.
நாற்று பருவத்தில் தண்டு, இலைக் காம்பு என்பன ஊதா நிறமாகும்.
நீள்வட்ட/ வட்ட வடிவான பழமாகும்.
ஒரு பழம் 60 - 90 கிராம் ஆகும்.
பள்ள நாட்டு ஈர வலயத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

ஊதா வர்க்கம்:
ஊதா நிறமான பழம்.
நாற்றுப் பருவத்தில் இலை, தண்டுக் காம்பு என்பன பச்சை நிறமாகும்.
சிறிய நீள்வட்ட வடிவான பழமாகும்.
ஒரு பழம் 35 - 50 கிராம் ஆகும்.
பழச்சாறு மஞ்சள் வர்க்கத்தை விட தரம் கூடியது.

கடல் மட்டத்தில் இருந்து 1000 மீற்றர் இற்கு கூடிய பிரதேசத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

ரகங்கல கலப்பு வர்க்கம்

மஞ்சள், ஊதா வர்க்கங்களை கலப்பு செய்து உருவாக்கப்பட்டது.
பழம் மென் சிவப்பு கலர்ந்த ஊதா நிறம்.
மலை நாட்டு பிரதேசத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. வெள்ளம் பிடிக்கும் பிரதேசத்திற்கு பொருத்தமற்றது ஆகும்.

நடுகை இடைவெளி:

4.5 m * 2 m

நடுகைக் குழி:

60 cm அகலம் 60 cm
ஆழம் 60 cm உயரம்

நடுகை:

மேல் மண், உக்கிய சாணம் என்பன இரண்டு கூடையளவும், யூரியா - 70 கிராம், TSP - 105 கிராம், MOP - 55 கிராம் இட்டு நடுகைக் குழியினை நிரப்பி நடுகை செய்ய வேண்டும்.

இதன் போது 20 - 25 cm நீளமான தாவரம் நடுகைக்கு பொருத்தமானதாகும்.

செப்டம்பர் , ஒக்டோபர் மாதங்களில் மழை காலம் ஆரம்பித்தவுடன் ஆரோக்கியமான கன்றுகளை தெரிவு செய்து நடுகை செய்ய வேண்டும்.

கொடிகள் வைரசு நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளதா என கவனம் செலுத்துதல் வேண்டும்.

மேலும் இரு வாரங்களுக்கு நிழல் வழங்குதல் வேண்டும்.

தடிகளை நடல்:

கன்றுகள் நடுகை செய்யப்பட்ட வரிசைகளுக்கு 30 cm முன்பாக ஒவ்வொரு 02 தாவரங்களுக்கு இடையிலும் பலமான தடி ஒன்றை நடுகை செய்ய வேண்டும்.
இதற்காக 2.5 m உயரமான கொங்கிறீட் தூண் அல்லது மரத்தடி என்பனவற்றை பயன்படுத்தலாம்.

கம்பி கட்டுதல்:

நில மட்டத்தில் இருந்து 02 அ உயரத்தில் கம்பி கட்ட வேண்டும்.
16 guage தடிப்புள்ள கல்வனைசு கம்பிகளை பயன்படுத்தலாம்.
இவை தடிகளுடன் இறுக்கமாக இணைக்கப் படும் வேண்டும்.
இக்கம்பிகளை கிழக்கு மேற்காக கட்ட வேண்டும். இதன் மூலம் பயிருக்கு போதியளவு சூரிய ஒளி கிடைக்கும்.

கொடிகளைப் படரவிடல்:

இளம் கொடிகள் தடிகளுடன் இணைக்கப் பட்டுள்ள கம்பியினை நோக்கி படர

உதவியாக சிறிய தடி ஒன்றை நட்டு தடியையும் கம்பியையும் மெல்லிய கயிறு ஒன்றினால் இணைத்து கயிற்றின் வழியே கொடியினை படர விடுதல் வேண்டும்.

நில மட்டத்தில் இருந்து கம்பியின் உயரத்திற்கு வளர்ந்த கொடி கம்பியின் வழியே 15 cm நீளத்திற்கு வளர்ந்த பின்னர் கொடியின் நுனி அரும்பை உடைத்து விடுதல்.

இவ்விடத்திற்கு அண்மையில் தோன்றும் 2 கிளைகளை கம்பியின் வழியே ஒன்றுக்கு ஒன்று எதிர் திசையில் படரவிடல்.

இக்கொடிகளை கம்பியின் வழியே சுற்றி விடுவதனால் கொடிகள் காற்றினால் சேதப்படுவது தடுக்கப்படும்.

கொடிகள் பிரதான தண்டில் இருந்து
2 m நீளத்திற்கு வளர்ந்த பின்னர் நுனி அரும்புகளை வெட்டி அகற்றுதல் வேண்டும்.

இரண்டாவது தடவையாக உருவாகும் கிளைகளிலேயே பூக்கள் தோன்றும். இக் கிளைகளை கம்பியில் இருந்து கீழ் நோக்கி வளரவிடல்.

இக்கிளைகள் ஒன்றுடன் ஒன்று பின்னப் படுவதை தடுக்க இக்கிளைகளில் உள்ள பற்றைகளை வெட்டி விடல் வேண்டும்.

நீர்ப்பாசனம்:

உலர் காலநிலை காணப்படும் வேளைகளில் நீர்ப்பாசனம் செய்வதனால் கொடிகளில் தொடர்ச்சியாக பூக்கள் உருவாகும்.

பூக்களில் செயற்கையான மகரந்தச் சேர்க்கை:

4 - 6 மாதங்களில் பூக்கள் உருவாகும்.

மதியம் 1 மணி முதல் 6 மணி வரை பூக்களில் செயற்கையான மகரந்தச் சேர்க்கை செய்யலாம்.

பூக்களில் கேசரங்களில் காணப்படும் மகரந்த மணிகளை தூரிகையால் அல்லது மல்துணியினை பயன்படுத்தி குறிகளின் மீது தடவல்.

மகரந்தச் சேர்க்கை செய்த பின்பு 2 மணி நேரத்திற்கு மழை செய்யக் கூடாது

கொடிகளை கத்தரித்தல்:

சரியான முறையில் கத்தரித்து உருவாகும் புதிய கிளைகளிலேயே பூக்கள் தோன்றுகின்றன. கம்பியில் இருந்து கீழ்நோக்கி வளரும் கிளைகளுக்கு இடையில் 20 cm இடைவெளி இருக்க வேண்டும்.

அறுவடை:

மஞ்சள் வர்க்கத்தில் இருந்து பூக்கள் தோன்றி 70 நாட்களிலும்
ஊதா வர்க்கங்களில் இருந்து 90 நாட்களிலும் அறுவடை செய்யலாம்.

விளைச்சல்:

5000 கிலோ/ ஹெக்டேர்

ஆக்கம்:
மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்
விவசாய போதனாசிரியர் (ஏறாவூர்)
சம்மாந்துறை, இலங்கை.

இதுவும் கடந்து போகும்

கஷ்டமில்லாத பயணத்தையும்
கவலையில்லாத வாழ்வையும்
இஷ்டப் பட்டு யாரும்
ஏற்றுக் கொள்வதில்லை

விரும்பியோ விரும்பாமலோ
விதி எல்லோரையும்
விளையாடி விடுகிறது
வெற்றியும் அடைகிறது

வேதனை
விலாசம் தேடாதோரையும்
சோதனை
சொந்தம் கொள்ளாதோரையும்
கண்டு பிடிப்பது
கடினமான காரியம்

எடையில் சிறிது பெரிதென்றாலும்
எல்லோர்க்கும் சிக்கல் உண்டு
என்னாளும் விக்கல் உண்டு

பெரிய பிரச்சினை வரும் வரைதான்
சிறிய பிரச்சினை
சிந்தையைக் கொல்லும்
ஆம்
பின்னைய பிரச்சினை பெரிதென்றால்
முன்னைய பிரச்சினை முடிந்து விடும்

மலை போல் பிரச்சினையா
மனம் கலங்கத் தேவையில்லை
துகள் போலாக
துளிப் பொழுது போதும்

சூரியனும் சந்திரனும்
தோன்றி மறைவது போல்
காத்துக் கொண்டிருக்காமல்
காலம் கடப்பதைப் போல்
எதுவும் எமை விட்டு கடந்து போகும்
இதுவும் நிச்சயமாய் கடந்து போகும்

றம்ஸானா ஸமீல்

நெகிழி (பொலித்தீன்)

ஓர் உயிர்க் கொல்லி

ஜனூன் கதிஜா அன்சார். திருகோணமலை

இன்று எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்நதொரு பாவனைப் பொருள் என் றால் அது நெகிழி என்றே கூறவேண்டும். பிளாஸ்ரிக் பொலித்தீன் இல்லாதவுலகை கற்பனையே பண்ண முடியாதளவிற்கு அதன் பாவனை உலகம் முழுவதும் வியாபித் துள்ளது.

பொலித்தீன் அல்லது பிளாஸ்ரிக்கிற்கு நீண்ட கால வரலாறு உண்டு. “பிளாஸ்ரிக் கோஸ்” என்ற கிரேக்கச் சொல்லில் இருந்தே பிளாஸ்ரிக் என்ற சொல் உருவானது. பிளாஸ்ரிக்கோஸ் என்பது “வார்க்கத்தக்க ஒரு பொருள்” எனப் பொருள்படும்.

இந்த நெகிழி முதன் முதலில் 1862 இல் லண்டனைச் சேர்ந்த அலெக்சாண்டர் பார்க்ஸ் என்பவரால் செல்லுலோஸ் என்ற பொருளில் இருந்து தயாரிக்கப்பட்டது. பின்னர் காலத்திற்குக் காலம் பல்வேறு இரசாயனக் கலவை கொண்டு பல்வேறு வகையான நெகிழிகள் உற்பத்தி செய்யப் பட்டன. உதாரணமாக 1869 இல் ஜோன் ஹயாத் என்பவர் செல்லுலோஸ் என்ற மாற்றுப் பொருளை உருவாக்கினார்.

1907 இல் லியோ பெர்லாண்டு என்றவர் செயற்கை வேதியை கொண்டு உருவாக்கினார்.

ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு முன் மனிதர்கள் அரக்குப்பூச்சியின் பிசினை பிளாஸ்டிக் போன்று பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த நெகிழியானது கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன், காரியம், சிலிக்கேற்று போன்ற வேதிப் பொருட்களைச் சேர்த்தே தயாரிக்கப்படுகின்றது.

இதனால் இவை இலகுவில் நெகிழ்ந்து கொடுக்கக்கூடியதாகவும், உக்கும் தன்மையற்றதாகவும், பாவனைக்கு மிகவும் இலகுவானதாகவும் அமைகின்றது.

எனவே எமது வாழ்வை இலகுவாக்க உருவான இந்த நெகிழி இன்று மனித வாழ்விற்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதோடு சூழல் மாசடைவதிலும் பெரும் பங்காற்றுகின்றது.

நெகிழியினால் ஏற்படும் பாதிப்புகள் எண்ணிலடங்காதவை. இது மக்கி போவதற்கு பல ஆயிரம் ஆண்டுகள் எடுக்கும். அவ்வாறு மக்கிப் போனாலும் அதன் பாதிப்பு தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். இதனால் இது ஒரு உயிர்க் கொல்லியாக அமைகின்றது.

நெகிழிப் பொருட்களை மண்ணில் இடுவதனால் அல்லது புதைப்பதனால் அவை மண்ணில் படைகளாகப் படிந்து விடுவதனால் நீரை நிலத்தினுள் ஊடுவடிய விடாமல் தடுக்கின்றது. இதனால் காலப்போக்கில் நிலக்கீழ் நீர வளம் இல்லாமல் போய்விடும். இது எதிர்கால உயிரின இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும். அத்துடன் மண் வளம் இழந்து பயிர் செய்கையையும் பாதிக்கச் செய்யும். உக்கித் துகள்களாகும் நெகிழித் துணிக்கைகள் மண்ணுடன் கலப்பதனால் மண்ணங்கிகள் இறக்க நேரிடும்.

நெகிழிக் கழிவுகளை எரிக்கும் போது டயொக்சீன் மற்றும் யூரன் எனும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் வெளியேற்றப்படும். இதனை சுவாசிப்பதனால் சுவாச நோய் மற்றும் தோல் நோய்கள் ஏற்பட வழிவகுக்கின்றன.

இன்று நாம் எமது அன்றாடப் பாவனையின் போது பிளாஸ்ரிக் பாத்திரங்களைப் பயன்படுத்துகின்றோம். இதில் சூடான நீரையோ, உணவுகளையோ இடும் போது இவற்றிலுள்ள இரசாயனங்கள் கரைந்து உணவுடன் கலந்து விடுகின்றன. இவ்உணவு எமது உடலினுள் சேரும் போது நாளடைவில் அது புற்றுநோய் கட்டிகளை உருவாக்கி விடுவதாக உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அத்தோடு பிறப்புக் குறைபாடுகள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல், இழையங்களின் மீளுருவாக்கம் என்பற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இவர்கள் கூறுகின்றனர்.

எம்மால் சூழலில் வீசப்படும் லஞ்சீட், சொம்பிங்பேக் போன்றவற்றை கால் நடைகள் மற்றும் விலங்குகள் உண்ணுகின்றன. இவை அவற்றின் குடல்களில் சிக்கி விடுவதனால். அவ்விலங்குகள் உயிரிழக்க நேரிடுகின்றது.

கடல்கள் மற்றும் சமுத்திரப் பகுதிகளிலேயே பெருமளவான நெகிழிக் கழிவுகள் சேருகின்றன. இக்கழிவுகளை மீன்கள் உண்ணுவதனால் மீனினம் அழிவடைகின்றன. இம்மீன்களை நாம் உண்ணுவதனால் எமது உடல் நலம் பாதிக்க நேரிடுகின்றது.

நெகிழியை மீள்சுழற்சி செய்வதனால் அல்லது எரிப்பதனால் பச்சைவீட்டு வாயுக்கள் வெளியேற்றப்படும். இது புவி வெப்பநிலையை அதிகரிக்கச் செய்து சூழற் சமநிலையை பாதிக்கச் செய்கின்றது.

இத்தகைய உயிராபத்தான நெகிழியின் பாவனையோ நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் 9.5 பில்லியன் தொன் உற்பத்தி செய்யப் பட்டு பயன்படுத்தப்பட்டது. இது 2050 ஆம் ஆண்டில் ஒரு வருடத்திற்கு 1.1 பில்லியன் தொடக்கம் 1.5 பில்லியன் தொன் உற்பத்தி செய்யப்படும் எனக் கூறப் படுகின்றது. இதிலிருந்து, நாம் தற்போது நெகிழிமயமான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

நெகிழிப் பாவனையை ஒருபோதும் எம்மால் முற்றாக ஒழித்து விட முடியாது. அதன் பயன்பாடும் தேவையும் பல்வேறு துறைகளில் அத்தியாவசியமாகின்றது.

ஆயினும் நெகிழியின் உயிராபத்தை உணர்ந்து அதிலிருந்து எம்மையும், எமது எதிர்கால சந்ததிகளையும் பாதுகாக்க எம் மாலான நடவடிக்கைகளை எடுக்க முடியு மல்லவா?

- குறிப்பாக வீடுகளில் நெகிழி பாவனை யைக் குறைத்தல்.
- உணவுப் பொருட்களை பொலித்தீனில் பொதியிடுவதை தவிர்த்தல்.
- பிளாஸ்ரிக் பாத்திரங்களின் பயன்பாட் டைக் குறைத்தல்.
- பொருட்களை வாங்குவதற்கு பொது வான துணியினாலான உறைபையைப் பயன்படுத்தல்.
- பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கை எரிப்பதைத் தடுத்தல்.
- நிலத்தில், நீர்நிலைகளில் நெகிழிப் பொருட்கள் சேர்வதை தடுத்தல்

இவ்வாறான சின்னச் சின்ன விடயங்களை நாம் ஒவ்வொருவரும் கடைபிடித்து சூழல் நேய மனப்பாங்குடன் வாழ்வோமாயின் உயிராபத்துக்களை குறைத்துக்கொள்ள முடியும்.

என் இனிய தனிமையே.....

பேச்சுத்துணைக்கு எமை ஒத்த
மானிடப் பிறவிகள் அற்ற ஒரு
நிலைதான் தனிமை என்பதா?
அவ்வாறுதானெனின்
அந்தத் தனிமையை நான் நேசிக்கிறேன்
அந்தத் தனிமையையை நான்
யாசிக்கிறேன்

பிரபஞ்ச ஓசை அடங்கிய
ஒரு ஜாமத்தில்
சுற்றி வர உற்றவர்கள்
உறங்கிடும் பொழுதினில்
நான் மட்டும் உறங்காத
ஒரு பொழுதுதான் தனிமையெனில்
அந்தத் தனிமையை நான்
வரவேற்கிறேன்
அந்தத் தனிமையை நான் வரமாய்
ஏற்கிறேன்

கடிகாரத் துடிப்பும்
இதயத் துடிப்பும்
இதமாகப் பேசிக்கொள்ளும்
அர்த்த ஜாமத் தனிமை
எவ்வளவு அற்புதமானது
அது எல்லோருக்கும்
இலகுவில் வாய்க்கப் பெறுவதுமில்லையே

உயிர்களின் உருவாக்கம் பற்றியும்
விடியல் பற்றியும்
சூரிய வருகை பற்றியும்
பூக்களுக்கு நிறம்பூசுவது பற்றியும்
சேவலைத் துயிலெழுப்புதல் பற்றியும்
நாளைய என் வெற்றி பற்றியும்
அந்த நிசப்த இரவு
சொல்லும் சேதிகள்தான்
எத்தனை அற்புதமானவை
அந்தத் தனிமைதான் எத்தனை
இனிமையானது

அந்தோ..
ஒரு காலையின் தனிமைதானன்றோ
எங்கோ மிதந்து வரும் ஒரு
இன்னிசை கீதத்தால் இதயத்தை
முழுவதுமாய் நிரம்பி வழியச் செய்கிறது
காலையில் கேட்கும் பாடலை
நாளின் அந்தம் வரை
நாவினிலே இசைத்திடச் செய்வதும்
அழகிய தனிமைதானன்றோ

பின்னுமொரு அந்தியில்
யாருமற்றுத் தனித்துப் போகும்
ஒரு பொழுதினில்தான்
அழகிய நினைவுகளை மனம்
அசைபோட எத்தனிக்கிறது
அனுபவங்களை ஒரு வீணை போல
மீட்டி மனமெல்லாம் ஆலாபனை
இசைக்கிறது.

விரல் பிடித்துச் சிறுபராயம் கூட்டிச்
செல்லவும்
முந்நாள் காதலனை கண் முன்னே
காட்டவும்
முதல் ஷ்பரிஷத்தை நினைவூட்டி
முகம் சிவக்க வைக்கவும்
மனதுணர்ந்து மெய்யாய் புன்னகைக்கச்
செய்யவும்

அழகிய தனிமையால் அன்றி
வேறெதனால் முடிந்து விடும்

கோப்பைத் தேநீரின் பாஷையை
மொழி பெயர்க்கவும்
கருகி விழும் இலைச் சருகிடமிருந்து
சங்கீதம் கற்றுக்கொள்ளவும்
பட்டாம் பூச்சியின் நிறப்பூச்சுக்களை
ஆராயும் ஒரு விஞ்ஞானியாகிடவும்
நிலவோடு கதை பேசவும்
மேகங்களோடு கை கோர்த்து நடை
பயிலவும்
யார் எமைப் பற்றி என்ன
எண்ணுவார்கள் என்ற
எண்ணமின்றி
நட்ஷத்திரங்களை எண்ணவும்
இனிமையான தனிமையல்லவா
வழி செய்கிறது

ஒரு கவிதை கருக் கொள்வதும்
ஒரு கதை உருக் கொள்வதும்
அரும் புத்தகமொன்றினுள்
எமைப் புதைத்து விடுவதும்
ஒரு பெருங்கனவு ஆழ்மனதில்
விதைக்கப்படுவதும்
நான் எனும் சுயம் பற்றிய
தேடல்கள் தொடங்குவதும்
வாழ்வின் பெரு வரங்கள்
கிடைக்கப்பெறுவதும் கூட
தனிமை எனும் தவத்தினாலன்றி
வேறென்ன

தனிமை
ஒரு பிரார்த்தனையின் கருவி
பாவ மன்னிப்பின் மீட்சி
இறைவனுடனான நெருக்கம்
ஆன்மாவுடனான உருக்கும்
உணர்ந்தால் அதுவே சுவர்க்கம்

இயற்கை விரும்பிகளுக்கும்
இதயத் திருடர்களுக்கும்
பிரபஞ்சத்தை நேசிப்பவர்களுக்கும்
குழந்தை மனம் கொண்டு
வாழ்வின் ஒவ்வொரு நொடியையும்
தடவிப் பார்க்க ஆசைப்படுவோருக்கும்
ஞானிகளுக்கும் யோகிகளுக்கும்
சுவாமிகளுக்கும் தியாகிகளுக்கும்
தனிமை என்பது ஒரு கட்டாயத்
தேவை
அது ஒரு சுவனச் சிறை

ஃபத்வா துகான்,பாப்லோ நெரூடா
வில்லியல் சேக்ஷ்பியர், ஜோர்ஜ்
எலியட்,வைரமுத்து
நீலாவணன்,மகாகவி, பஷீல் காரியப்பர்
எனும் பெரும் படை
என் தனிமையில் புடை சூழ்ந்திருப்பதால்
என் தனிமை என்றென்றும் இனிமையே
இனிமையே.....

-சுமைய்யா ஜெஸ்மி மூஸா-

வாய்ச் சுகாதாரமும் நாமும்

(முக்கிய குறிப்புகள்)

Dr பர்வின் அப்துல் காதர் மருதமுனை

வாய்ச் சுகாதாரம் என்பது பற்கள், நாக்கு, உதடுகள், கன்னம், தொண்டை, உமிழ் நீர் சுரப்பிகள் போன்றவற்றின் ஆரோக்கியத்தை உள்ளடக்கும்.

வாய்க்குழியானது ஒரு சிக்கலான பகுதி. அதனுள் உடலின் வெவ்வேறு தொகுதிகளின் உறுப்புக்கள் பின்னிப் பிணைந்துள்ளன. அதனாலேயே அதற்கான தனியான கற்கை நெறியும், தனியான பிரிவும், உலக நாடுகளில் அமுல் படுத்தப்பட்டுள்ளது

வாய்ச் சுகாதாரத்தின் முக்கியத்துவம்

அழகான முகத் தோற்றத்திற்கும், அழகிய புன்னகைக்கும்.

உணவை ருசித்து, மென்று சாப்பிட்டு மகிழ.

வாய்க் குழியானது உணவு சமிபாட்டுத் தொகுதியின் தொடக்கப் பகுதி

உடல் ஆரோக்கியத்தை பேண. ஏனெனில், வாய்க் குழியில் உருவாகும் நோய்கள் உடலில் பல்வேறுபட்ட நோய்களை உருவாக்கும்.

உடலில் ஏற்படும் சில நோய்களின் அறிகுறிகள் வாய்க் குழியில் தென்படும். அவ்வாறான நோய்களை கண்டறியவும் வாய்ச்சுகாதாரத்தில் கவனமெடுப்பது அவசியம்.

வாயில் ஏற்படும் பொதுவான நோய்கள்

- பற்சூத்தை
- முரசு கரைதல்,
- முரசிலிருந்து இரத்தம் வருதல்
- பற்களில் காவி, கறை படித்தல்
- வாயிலிருந்து துர் நாற்றம் வருதல்
- வாய்ப் புற்றுநோய்

வாய், பல் சுகாதாரத்தை பேணும் வழிகள்: -

- உரிய முறையில் பல் துலக்கல்
- சரியான உணவுப் பழக்க வழக்கங்கள்
- புகைத்தல் பாவனை, வேறு பழக்க வழக்கங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல்
- ஒழுங்கான பற்சிகிச்சையும், ஆலோசனையும்
- உரிய முறையில் பல் துலக்குதல் -
- தினமும் குறைந்தது இரு தடவைகள் காலையும் இரவிலும் பல் துலக்குதல்
- மிருதுவான (soft) பற்தூரிகை பயன் படுத்தல்.
- பற்தூரிகையின் தூரிகைப் பகுதிகள் வளையும் போது தூரிகையை மாற்ற வேண்டும்
- பொதுவாக 3- 4 மாதங்கள் ஒரு பற்தூ ரிகையை பயன்படுத்தலாம்
- பற்பசை - புளோரைடு அடங்கிய பற் பசை பயன் படுத்த வேண்டும்.
  பற்பசையின் அளவு - சிறியோர்
  மெல்லிய படை, 6 வயது முதல் - ஒரு பட்டாணி அளவு

  வளர்ந்தோர் - தூரிகையின் தலைப் பகுதியின் நீளமளவு
- சரியான உணவுப் பழக்கம் -
- இனிப்பு அதிகமான பற்களில் ஒட்டும் தன்மையுள்ள உணவுகளை தவிர்த்தல்
  உ+ம் - பிஸ்கட், சாக்லேட்
- அவ்வாறான உணவுகளை உண்பதாயின் பிரதான உணவு வேளைக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்போ பின்னரோ உண்ண வேண்டும்.
- பால், தேநீர் அருந்தும் போது பயன் படுத்தும் சீனியின் அளவை குறைத்தல்.
- இனிப்பு உணவு உண்டபின் வாய் கொப் பளித்தல் அல்லது நீர் அருந்துதல்.
- பற்களில் ஒட்டாத இனிப்பு வகை களையும் உடலுக்கு பொருத்தமான உணவுகளையும் உண்ணுதல்.
  உ+ம் - பழங்கள், மரக்கறிகள், பால் பாக்கெட், யோகட்.
- புகைத்தல் பாவனை, வேறு பழக்க வழக் கங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளல். -
- புகைகளை வெளிவிடும், வெளிவிடாத போதைப் பொருட்கள் அனைத்தும் வாய்ப்புற்று நோய்க்கு வழி கோலும்.
  உ + ம் - பீடி, சிகரெட், மாவா, பாபுல், பீடா, பாக்கு வகைகள்

இவற்றை நுகராதவர்களை விட நுகர்வோருக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்பட நான்கு மடங்கு சாத்தியம் அதிகம்.

வெற்றிலைக் கூறிலுள்ள பாக்கு மிகவும் அபாயகரமானது.

சுய வாய்ப்பரிசோதனை செய்வதன் மூலம் ஆரம்ப அறிகுறியிலேயே நோயை அறிந்து சிகிச்சை பெறலாம்.

ஒழுங்கான பற்சிகிச்சையும் ஆலோசனையும் : -

ஒவ்வொருவரும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பல் வைத்தியரை அணுகி வாயை பரிசோதித்துக் கொள்ளல்.

சிகிச்சைகள் தேவைப்படுமிடத்து உரிய காலப்பகுதியில் அதை செய்து கொள்ளல்.

நூல் விமர்சனம்

ககனத்தில் உதயமாகும் தாரகைகள்

தூக்கத்தை தொலைத்து விடும் நீண்ட இரவுகளை நல்ல வாசிப்புகளுக்காய் தொலைத்து விடலாம்.

ஆனால் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் இந்த தொழில்நுட்ப உலகில் வாசிப்பதற்கு எங்கே நேரம் என அங்கலாய்ப்போரும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை.

ஆயினும் நல்ல வாசிப்புக்கான அருமையான நூல்களும் வெளிவராமலும் இல்லை.

சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் ஒரு வகையில் மக்களின் பிரதிநிதிகளாகி விட்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகி விட்டது.

இப்போதெல்லாம் நம் சமூகத்தின் மீதும், சமூக அவலங்களை சாடுவதன் மீதும் இலக்கியவாதிகள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு அறிவுரை வழங்குவது அவர்களது கடமையாகி விட்டது.

சிந்தனையோட்டம் விஸ்தீரணமடையும் போது அதனுடன் இணைந்தவர்கள் பரோபாரிகள் ஆகி விடுவதும் இயல்பான நிலை தான்.

நற்சிந்தனையுடன் தன்னை சுற்றி இருப்பவர்களின் நலன் பற்றி அறிந்து கொண்டு மனிதாபிமான அக்கறையுடன் செயல்படும் சிறந்த நற்பண்புகளை தம்முள் தானாகவே உருவாக்கிக் கொள்கின்ற எழுத்தாளர்கள் நம் மத்தியில் பரவலாகவே காணப்படுகின்றனர்.

கண்ணில் காணும் வாழ்வியல் துன்பங்களையும், சோகங்களையும், மனிதத்துவம் நோக்கிய அர்ப்பணிப்புகளாக்கி விடுவதில் தன் பங்களிப்பை மிக சிறப்பாகவே செய்து விடுகின்றனர்.

சிறந்த வாசிப்பிற்கான நூல்களை தேடி வாசித்து இன்புறுவதோடு அதனுள் புதைந்திருக்கும் அம்சங்களுடன் இரண்டறக் கலந்து விடுவதும் இயல்பாகி விடுகின்றது.

அப்படியான ஒரு தேடலில்....

அண்மையில் அருமையான ஒரு கவி மலர் வாசிக்க கிடைத்தது.

கிழக்கிலங்கையின் சிறந்த பெண் ஆளுமைகளுள் ஒருவரான கிண்ணியாவை சேர்ந்த ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான் அவர்கள் எழுதிய

ககனத்தில் உதயமாகும் தாரகைகள், என்ற அருமையான கவிதை தொகுப்பு நூல் வாசித்தேன்.

இந்நூலாசிரியர் சகோதரி ஜெனீரா தௌபீக் சிறு வயது முதல் பன்முக எழுத்தாளராக சிறந்து விளங்கும் ஒருவர்.

இதுவரை அருமையான ஒன்பது நூல்

களை கலையுலகில் இவர் பிரசவித்திருப்பது இலக்கியப் பிரியர்களுக்கான ஒரு வாசிப்பு வரமாகவே கருதலாம்.

அழகிய அட்டை படத்துடன், 60 பக்கங்களில், 54 கவிதைகளை அழகாய் கோர்த்து நூலாக்கி இருக்கிறார்.

அத்தனையும் தினகரன், சுடரொளி, நவமணி, தினமணி, எங்கள் தேசம், தினகரன், பூங்காவனம், கலாமதி, சங்கமம் போன்ற தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து வாசகர்களின் பாராட்டை பெற்ற கவிதைகள்.

இந் நூலுக்கான அழகிய அணிந்துரையை கண்டி ஹீரஹஸ்ஸல கலா பூசணம் சர்புன்னிஸா அவர்களும், வாழ்த்துரையை கலாபூசணம் மர்ஹூம் ஏ .எம் எம். அலி அவர்களும் எழுதி இருக்கிறார்கள்.

அன்புத் தாய் தந்தையரில் ஆரம்பமாகும் இவரின் கவிப் பூக்கள், பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு வழிநடத்தல் என நமக்கான அத்தனை அர்ப்பணிப்புகளையும் தமது கவியில் மிக அழகாய் கூறியிருக்கிறார்.

அடுத்து கணவர் என்ற கவியில்,...

திருமணத்தின் பின் ஒரு பெண்ணுக்கான அனைத்து சந்தோஷங்களும் ,உயர்வுகளும் கணவனிடம் இருந்து கிடைப்பதையும், கணவன் மனைவி நகமும் சதையுமாக இரண்டற கலந்து வாழ்வதையும் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார் .

காதல் போன்ற கருப்பொருளை கொண்டே தொடர்ந்து கவி பாடும் கவிஞர்கள் மத்தியில், "மனித வாழ்வியலின் பல்வேறு பகுதிகளையும், துயரங்களையும்"

கனதி மிக்க வலிகளின் வரிகளாக தனது கவிதைகளில் பதிவு செய்திருக்கிறார் நம் கவிஞர் ஜெனிரா தௌபீக்.

நீண்ட நெடுஞ்சாலைகளாக இவரின் 54 கவிதைகளும் தொடர்ந்தாலும், எல்லாவற்றையும் விமர்சித்து விடவே மனது துடிக்கிறது. இங்கு முடியாதென்பதால் ஒன்றிரண்டையாவது பார்த்து விடுவோம்.

இவரின் கவிகளுள் மிகப் பிடித்தமான வரிகளாக..

வையம் தூற்றிடினும் வஞ்சம் தீர்க்க மாட்டோம்.
ஆண்டவனை துதித்திடுவோம் துன்பம் தீர மாட்டாது.

எவ்வளவு ஆழமான வரிகள்....

மாடி மனை இருந்தென்ன
மனிதாபிமானம் வேண்டுமடி.
கோடி பணம் தேடி என்ன
கொடுக்கின்ற மனசு வேண்டும் .

என்ன அருமையான மனித நேய சிந்தனை நம் கவிஞருள்.

இயற்கை, கானகத்தின் வனப்பு ,
பா தரும் மேகம்.

போன்ற கவிதைகளில் இயற்கை எழிலினையும் அழகாக பாடி இருக்கிறார்.

இவரின் அனேகமான கவிகள் மனித துயரங்களையும் மனிதாபிமான ஏக்கங்களுடனான வாழ்வில் கோலங்களையும் நீண்ட பொழுதுகளில் மனதில் நிறுத்தி செல்கின்றது.

தான் வாழும் சூழலில் உள்ள சமூக சார் விடயங்களையும் எதார்த்தங்களையும் தன்பால் ஈர்த்தெடுக்கும் ஆதர்சிப்பு இவரது எழுத்துக்களில் விரவிக் கிடக்கின்றது.

எதிர்காலங்களிலும் இதுபோன்ற நல்ல நூல்கள் இவர் கொண்டு வர வேண்டும் என பிராத்திக்கிறோம்.

ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்

கிண்ணியா

அவரியின் ஆளுமை

கலாநிதி மஷ்ரூபா மொஹமட் மஜீத்

இவ்விதழின் ஆளுமையாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மருதமுனை என்னும் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மஸ்ரூபா மொஹமட் மஜீத். இவர் அல்மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவி ஆவார். ஆங்கில ஆசிரியராக கடமையிற்றி கிழக்கு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான துறையில் விஞ்ஞானமாணி (B.sc. Hons) பட்டத்தை பெற்றதுடன் பல்கலைக்கழக கல்வி சேவைக்குள் நுழைந்தார். தனது தொழில் வாண்மையை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு விரிவாக்கி உள்ளார். எமது சமூகத்தில் சிறந்த கல்விமானாக பரிணமிக்கும் இவர் மருதமுனையின் முதலாவது பெண் கலாநிதி என்ற பெருமைக்கும் உரியவர். அத்தோடு சிரீலங்கா பென் கிளப்பின் போஷகர்களில் ஒருவராகவும் இருக்கும் இவர் கலாநிதி மஷ்ரூபா மஜீத் அவர்களை செவ்வி காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும், Sri Lanka Pen கிளப்பின் வெளியீடான அவரி சஞ்சிகை 13 இல் ஆளுமை பகுதியில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கல்வியில் பல உயரிய தகைமைகளை பெற்றுள்ள நீங்கள் பல பெண்களுக்கும் முன்னுதாரணமாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு எமது அமைப்பின் சார்பில் வாழ்த்துக்கள். உங்கள் கல்வித் தகைமைகள் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ! ஒரு பெண் தனது கல்வி பாதையில் கலாநிதி வரை பட்டங்களை பெறுவதென்பது நிச்சயமாக பல சவால்களுக்கு உட்பட்டது தான். நானும் அதற்கு விதிவிலக்கல்ல.

விஞ்ஞானத்துறைக்கு (உயிரியல் விஞ்ஞானம்) கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்தது. விஞ்ஞானமாணியை பெரும் மனதுடன் ஏற்றுக் கொண்டேன்.

ஆங்கில உதவி ஆசிரியராக 1992 இல் நியமனம் பெற்றேன். ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே பல்கலைக்கழக கல்வியை தொடர்ந்து Second Class (Upper Division) என்ற தரத்துடன் சித்தியடைந்தேன். எனது தொகுதியில் (batch) மிக உயர்ந்த பெறுபேற்றுக்கான பல்கலைக்கழக விருதையும் பெற்றுக் கொண்டேன்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நான் விஞ்ஞானமாணி (B. Sc (Hons) என்ற எனது முதலாவது பட்டத்தைக் பெற்றுக் கொண்டேன்.

*1995*இல் பல்கலைக்கழக கல்வி முடிந்ததன் பின்னர் *96* இல் நான் ஜனாப். எம்.ஐ.என். ஹமீம் B.Sc. (Hons) திருமணம் செய்தேன்.

1997 ல் ஆங்கில போதனாசிரியராக (English Instructor) தற்காலிக அடிப் படையில் இலங்கை தென்கிழக்கு பல் கலைக்கழகத்தில் நியமனம் பெற்றேன். பின்னர் *1998*ல் தற்காலிக உதவி நூலகராக குறித்த பல்கலைக்கழகத்தில் பணிபுரிய தொடங்கினேன். உயர்கல்வித்துறைக்குள் பணிபுரிய வேண்டும் பங்காற்ற வேண்டும், மேலும் கற்று பட்டப்பின் தகைமைகளையும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கம் என்னுள் இருந்தது. மொத்தமாக நான்கு வருடங்கள் தற்காலிக நியமனத்துடன் பணியாற்றினேன். இக்காலகட்டத்தில் பட் டப் பின் கல்வி டிப்ளோமா இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தேன்.

2001 ஜனவரி மாதம் உதவி நூலகராக நிரந்தர நியமனம் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கிடைத்தது. இது ஒரு கல்வி சார் நூலகம். உதவி நூலகர் என்பது ஒரு விரிவுரையாளருக்கு எல்லா வகையிலும் சமமானது. வேலை தளத்திலும் பல சவால்க ளுக்கு முகம் கொடுக்க வேண்டி தான் இருந்தது.

அதன் பின்னர் *8* வருடத்திற்குள் நூல கத் தகவல் விஞ்ஞானத்தில் முதுமானியை பூரணப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. இதற்காக *2002*ல் நான் புலமை பரிசு பெற்று புதுடெல்லிக்கு சென்றேன். புதுடில்லியில் நான் அறிவியல் தொடர்பு மற்றும் தகவல் வளங்களுக்கான தேசிய நிறுவனத்தில் முதுமானியை ஆரம்பித்து இரண்டே இரண்டு கிழமைகள் கடந்த நிலையில் எனது இரண்டாவது மகனுக்கு சுகவீனம் காரணமாக உடனடியாக நாடு திரும்பினேன். அப்புலமைப் பரிசிலை என்னால் முழுமையாக பயன்படுத்தவோ மீண்டும் புது டெல்லி சென்று படிப்பை தொடரவோ முடியவில்லை. சில மாதங் களின் பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் படிப்பை தொடர்ந்தேன். ஒரு வருடம் முழுவதும் பாடநெறிகளை (course work) வெற்றிகரமாக பூர்த்தி செய்தேன்.

மறு வருடம் முழு நேர ஆய்வுக்குரியது. ஓரளவுக்கு ஆய்வு தலைப்பை தீர்மானித்து ஆய்வு முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்த வேளை 2004. 12. 24ல் சுனாமி எனும் ஆழிப்பேரலை காரணமாக முயற்சி. தடைப்பட்டது.

மீண்டும் ஆய்வு வேலைகளை மேற்கொண்டு 2007 இல் எனது முதுமானிக்குரிய ஆய்வறிக்கையை (Thesis) சமர்ப்பித்தேன். 2008 மே மாதம் நூலக தகவல் விஞ்ஞானத்தில் முதுமானி (Master of Library and Information Science) பட்டத்தை பெற்றேன்.

பல்கலைக்கழகத்தின் மின்னியல் வளங்களுக்கு பொறுப்பாகவும் விஞ்ஞான நூலகத்தின் தலைவராகவும் இப்போது பணியாற்றுகின்றேன்.

2013ல் நான் மலேசியாவின் மேனேஜ்மென்ட் அன்ட் சயன்ஸ் (Management and Science) யூனிவர்சிட்டியில் இணைந்து கலாநிதி கற்கையை மேற்கொண்டேன்.

சர்வதேச பல்கலைக்கழக மட்டத்தில் பல ஆராய்ச்சி மாநாடுகளில் விசேட அழைப்பாளராக மாத்திரமன்றி இலங்கையிலும் ஆராய்ச்சி மாநாடுகளை முன் நின்று செய்கின்றீர்கள்.அதுபற்றி கூறமுடியுமா?

ஆரம்ப காலங்களில் நான் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்த மலேஷியா, சிங்கப்பூர், பிரான்ஸ் மற்றும் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகள் தன்னம்பிக்கையூட்டி, சரியான ஆய்வு முறையில், மற்றும் துறைசார் அறிவைப் பெற்றுத் தந்ததுடன் என்னை இத்துறையில் ஸ்திரப் படுத்தின.

கடந்த வருடம் வழக்கமாக கொழும்பில் ஆங்கிலத்தில் நடைபெறுகின்ற தேசிய மாநாட்டை (NACLIS) எமது பிரதேசத்தில் தமிழ் மொழியில் நடத்த வேண்டும் என்ற முன்மொழிவை இலங்கை நூலக சங்கத்திடம் கோரினேன். கவுன்சில் அனுமதி பெற்று அம்மாநாட்டை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மிகவும் சிறப்பாக நடத்தி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நூலகத் தகவல் விஞ்ஞான துறையின் ஆய்வாளர்கள் பாடசாலை மற்றும் பொது நூலகங்களின் நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள் ஆகியோரை பங்கேற்ற வைத்ததுடன் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள், கல்விசார் நூலகர்கள், இலங்கை நூலக சங்கத்தின் கவுன்சில் உறுப்பினர்கள் அனைவரையும், ஒன்று திரட்டி, பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டதில் மிகவும் திருப்தியும், மகிழ்ச்சியும், மனநிறைவும் ஏற்பட்டது.

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பல குறிப்பிடத்தக்க விருதுகளை பெற்றுள்ள நீங்கள் அது பற்றி எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

நான் சிரேஷ்ட நூலகர் தரம் ஒன்றில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்தில் கடமையாற்றுகின்றேன். நான்கு வருடங்களாக பல்கலைக்கழகத்தின் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவு

நிலையத்துக்கான பணிப்பாளராகவும் கடமையாற்றியிருக்கின்றேன். நூலகர் என்பது பல்கலைக்கழகத்தில் ஒரு கல்வி சார் பதவி நிலையாகும். நூலகத் தகவல் விஞ் ஞானத்துக்கான தேசிய கல்வி நிறுவனத் தின் வருகைதரு விரிவுரையாளராகவும், சிறீலங்கா நூலக சங்கத்தில் ஒரு விரிவுரை யாளராகவும் பணியாற்றியுள்ளேன். இ.தெ. கி. ல்கலைக்கழகத்தின், பிரயோக விஞ்ஞான பீடத்தில் 'தகவலறிவு' எனும் பாடத்தை கற்பித்து வருகிறேன்.

சிறீலங்கா நூலக சங்கத்தின், கவுன் சில் உறுப்பினராகவும், ஆய்வுக்குழு தலை வராகவும் கடந்த 2 வருடங்கள் பணியாற்றி யுள்ளேன். இக்காலகட்டத்தில், நூலக தகவல் விஞ்ஞானத்தில் டிப்ளோமா, உயர் டிப்ளோமா, கலைமாணி, பட்டப்பின் டிப்ளோமா மற்றும் முதுமாணி மாணவர்க ளுக்கான ஆய்வு வழிகாட்டியாக செயல் படுவதுடன் அவர்களுக்குரிய ஆலோசனைக ளையும் வழங்கி வருகின்றேன்.

சிறீலங்கா நூலக சங்கம் எனக்கு 2022ல் Fellowship என்ற அங்கத்துவ தரத்தினை வழங்கியது. அதன் 2023 / 24ம் ஆண்டிற்கான தலைவராக (President) இருந்து பணியாற்றக் கிடைத்தது. அப் போது 2024ம் ஆண்டிற்கான சர்வதேச மாநாட்டை கொழும்பில் மிகப்பிர மாண்டமாக நடாத்தினோம். இலங்கை யின் பிரதமர் கலாநிதி ஹரினி அமர சூரிய அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

மேலும், நூலக சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் சர்வதேச கூட்டமைப்பின் (International Federation of library Associations and Institutions- IFLA) ஒரு அங்கத்தவராகவும் Digital humanities and Digital scholarship என்ற பிரிவின் நிலைக்குழு உறுப்பினராகவும் செயல்படுகின்றேன்.

எனது விஞ்ஞானமாணி பட்டமளிப்பு விழாவில் அதி கூடிய பெறுபேற்றுக்கான ரதினி ஆனந்த மூர்த்தி ஞாபகார்த்த விருதை பெற்றுக் கொண்டேன்.

உதவி நூலகராக கடமையாற்றும் பொழுது 2007இல் நியூசிலாந்தில் உள்ள விக்டோரியா பல்கலைக்கழகத்தில் ஒரு மாத கால பயிற்சி பெறுவதற்கான முழு புலமைப் பரிசல் ஒன்றினை IFLA எனக்கு வழங்கியது. அதனைத் தொடர்ந்து 2008 ல் புது டில்லியில் உள்ள NISCAIR - அறிவியல் தொடர்பு மற்றும் தகவல் வளங்களுக்கான தேசிய நிறுவகத்தில் இரண்டு வாரகால 'மின்னியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்' தொடர்பான பயிற்சியையும் உலக வங்கி செயல் திட்டம் ஒன்றின் நிதி உதவி பெற்று நிறைவு செய்தேன்.

2017ல் ஐக்கிய அமெரிக்கா அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசில் ஒன்றின் மூலம் நூலகம் தொடர் பான ஒரு கல்வி சுற்றுலாவில் ஐக்கிய அமெரிக்காவின் நான்கு மாநிலங்களை பார்வையிட முடிந்தது.

மேலும் கலாநிதி பட்டம் பெறுவதற்கான எனது ஐந்து ஆய்வு கட்டுரைகளுக்கு எங்களுடைய பல்கலைக்கழகத்தின் மூதவை (Senate) விருதுகளை பெற்றிருக்கின்றேன். அது மட்டுமல்லாமல் 2023இல் பல்கலைக்கழகத்தின் அதி உயர் பத்து ஆய்வாளர்களில் ஒருவராக மதிப்பிடப பட்டு உபவேந்தர் விருதையும் பெற்றுக் கொண்டேன். இதுவரையில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் சில புத்தகங்களுக்கான அத்தியாயங்களையும் ஒரு பாட நூலையும் எழுதி உள்ளேன்.

மருதமுனையின் முதல் பெண் கலாநிதி என்ற வகையில் நான் பல விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டேன். விசேடமாக சிரீலங்கா பென் கிளப் அதனுடைய முதலாவது மாநாட்டில் எனக்கு விருது வழங்கி பொன்னாடை போற்றி கௌரவித்ததை இன்றும் நினைத்து பெருமையடைகிறேன்.

Sri Lanka pen கிளப்பின் போஷகர்களுள் ஒருவராக பயணிக்கும் நீங்கள் இவ்வமைப்பின் செயல்பாடுகள் பற்றி, என்ன கூற விரும்புகிறீர்கள்?

சிறீலங்கா பென் கிளப் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து அதன் ஒரு போஷகராக நான் தொடர்பு பட்டிருப்பது பெருமைக்குரிய ஒரு விடயமாக கருதுகின்றேன். இலங்கையின் பல பாகங்களிலும் சிதறிக்கிடந்த பெண் எழுத்தாளர்களை மற்றும் ஆளுமைகளை ஒன்று திரட்டி ஒரு குடையின் கீழ் கொண்டு வந்ததில் இவ்வமைப்பின் ஸ்தாபக தலைவி, இலக்கிய வித்தகர், கவிதாயினி மசூறா சுஹூருதீன் அவர்களின் கடின உழைப்பும் பங்களிப்பும். இதன் மூலம் இவ்வமைப்பின் அங்கத்தவர்கள் பல்வேறு விடயங்களிலும் அறிவு மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்கின்றனர். வளர்ந்து வரும் இளம் கலைஞர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக இவ் வமைப்பின் தலைவி அயராது இயங்குகின்றார்.

எதிர்காலத்தில் பென் கிளப் சர்வதேச மட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட வேண்டும். அகில உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாடுகளுக்கு ஆக்கங்களை சமர்ப்பிக்க வேண்டும்ஃ பங்குபற்றுதல் வேண்டும் என்பதுடன் இலக்கியத்திற்கு மேலதிகமாக பல்வேறு வகைகளிலும் மகளிர் மேம்பாட்டுக்காக உழைக்கின்ற அமைப் பாகவும் பென் கிளப் வளர வேண்டும் என்பதே எனது அவா.

நேர்காணல் செய்தவர்
ஷாமென் நிஸாம்டீன்,
கட்டுகஸ்தோட்டை

தனிமையின் இனிமை

தன்நலம் தனிநலம் தந்திடும் தனிமை
தரமாய் உரமாய் ஏகபோக உரிமை
எண்ணக் கடலில் குதித்து நீந்த
எண்ணிலா இன்பம் தனிமையின் இனிமை

தன்நிலை தனில் நின்று
தரமான சிந்தனைக்கு வடிவம் கொடுத்திடும்
தன் நிகரில்லா தத்துவம் வித்திடும்
தனிமையின் இனிமை சுவையானது சுகமானது

கால ஓட்டத்தில் கடந்த பாதையில்
பதிந்த சுவடுகள் பசிய நினைவுகள்
மீட்டிப் பார்க்கவும் இலயித்து மகிழவும்
படைத்தவன் பரிசு தனிமையின் இனிமை

தவத்தின் தளமே தனிமை அன்றோ
ஆன்மீக ஈடேற்றம் லௌகீக இரம்மியம்
ஆறுதலின் தேறுதல்கள் அமைதியின் அரவணைப்பு
அத்தனையும் தருகின்றதே தனிமையின் இனிமை

காத்திரமான கற்பனைக் குதிரைகளுக்கு சாவி கொடுக்க
சமுதாய வெளியை சிந்தைக்குள் படம்பிடிக்க
இலக்கியங்கள் இலட்சியம் பகர ஈருலகவெற்றி
தனிமையின் இனிமையிலே காணீர்

மூளைக்கு வேலை முனைப்பாய் முகிழ்க்க
இதயத்து வாசல் இதமே திறக்க
எழுத்தோடு எண்ணம் வண்ணமாய் கலக்க
வந்தே அமருது தனிமையின் இனிமை யே!!!

கலாபூஷணம்
அரபா மன்சூர்
கண்டி.

WHATSAPP TOP 5 UPDATES

இன்றைய துரித உலகின் தொழில் நுட்ப வளர்ச்சியில் மொபைல் போன் என்பது யாராலும் தவிர்க்க முடியாத தோர் விடயமாக மாறி விட்டது. குழந்தை முதல் பெரியோர் வரை அனைவரின் கையிலும் இருந்து கொண்டு அனைவரையும் தனக் குள்ளே கட்டிப் போட்டுக் கொண்டு வைத்துள்ளது இந்த மொபைல் போன். அதிலும் குறிப்பாக மொபைல் போன் ஒன்றை வாங்கிய உடனேயே அது எந்த வகையான போனாக இருந்தாலும் முதலில் அனைவரும் டவுன்லோட் செய்யக் கூடிய தோர் ஆஃப் தான் வாட்ஸ்அப்.

வாட்ஸ்அப் பயன்படுத்தாத யாரையுமே இங்கு காண முடியாது. கற்றல், கற்பித்தல், வணிகம், வைத்தியம், கருத்தரங்கு, கூட்டம், பல அமைப்புக்கள் என அனைத்துமே இன்று வாட்ஸ்அப் என்ற ஓரிடத்தில் தான் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனால் காலத்திற்கு காலம் பயனர் தேவையைப் பொருத்து வாட்ஸ்அப் தன்னை மெருகூட்டிக் கொள்ள வேண்டிய தேவையில் வாட்ஸ்அப் நிறுவனம் பல அட்டகாசமான அம்சங்களை அறி முகப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக AI (Artificial intelligence) எனப்படும் செயற்கை நுண்ணறிவு இல்லாமல் இன்று உலகில் எந்த தொழில் நுட்பமும் இல்லை என்ற நிலையில் அது அனைத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அந்த செயற்கை நுண்ணறிவை இப்போது நாம் சாதாரணமாக பயன்படுத்தும் அனைத்து சமூக வலைத் தளங்களில் கூட நாம் அறிந்தோ அறியாமலோ பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கின்றோம்.

அந்த வகையில் இக் கட்டுரையில் நாம் செயற்கை நுண்ணறிவு மூலம் வாட்ஸ் அப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல சுவாரஸ்யமான விடயங்களை பற்றி ஆராய இருக்கின்றோம்.

வாட்ஸ்அப் வரலாறு

(HISTORY OF WHATSAPP)

வாட்ஸ் அப் (WhatsApp) என்பது நுண்ணறி அலைபேசிகளில் இயங்கும் உடைமை உரிமையுள்ள (proprietary) ஒரு செய்தி பரிமாற்றி செயலி ஆகும். தமிழில் "பகிரி" அல்லது புலனம் அல்லது "கட் செவிஅஞ்சல்" என்றும் அறியப் படுகிறது. ஆன்ட்ராய்டு, ஆப்பிள், விண்டோஸ் மொபைல், நோக்கியாவின் சிம்பியன், பிளாக்பெரி போன்ற பல்வேறு அலைபேசி இயங்குதளங்களிலும் இயங்கும். 2009ம் ஆண்டு பிரையன் ஆக்டன் (Brian Acton), ஜேன் கோம் (Jan Koum) ஆகி யோரால் நிறுவப்பட்ட வாட்ஸ்ஆப் நிறு வனத்தால் வெறும் 55 பணியாளர்களை மட்டுமே கொண்டு இச்செயலி உருவாக்கப்பட்டது. இவர்கள் இருவரும் யாஹூ நிறு வனத்தில் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்செயலி நிகழ்நேரத்தில் இணை யத்தின் உதவியுடன் தகவலை வாட்ஸ் ஆப் பயன்படுத்தும் மற்றொரு ஒரு தனி நபருடனோ அல்லது ஒரு குழுவுடனோ பகிர்ந்துகொள்ள உதவுகிறது. எழுத்துக ளாலான உரை செய்திகள் மட்டுமின்றி படம், நிகழ்படம், ஒலிக்கோப்புகள் மற்றும் பயனரின் இருப்பிடத்தையும் இச்செயலியின் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். 2015ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தின்போது, இதை 900 மில்லியன் (90 கோடி) மக்கள் பயன்படுத்தியிருந்தனர்.

உருவாக்குனர்: வாட்ஸ் அப் இன்க்
தொடக்க வெளியீடு: 2009
இயக்கு முறைமை: ஐஓஎஸ்
ஆண்ட்ராய்டு பிளாக்பெர்ரி
நோக்கியா 40 வரிசை அலைபேசிகள்
நோக்கியா ஆஷா வகை அலைபேசிகள்
சிம்பியன் "விண்டோஸ் அலைபேசிகள்"
மென்பொருள் வகைமை:
நிகழ்நேர/உடனடி செய்தி பகிர்வு
உரிமம்:
உரிமை உடைமையுள்ள மென்பொருள்
இணையத்தளம்:
"www.whatsapp.com
நிறுவப்பட்ட நாள்:
2009
தலைமையிடம்:
மவுண்டெய்ன் வியூ, கலிபோர்னியா, அமெரிக்க ஐக்கிய நாடு
நிறுவனர்(கள்):
ஜேன் கோம்
பிரையன் ஆக்டன்
ஊழியர்கள்: 55
மேல்நிலை: நிறுவனம்

"பேஸ்புக் Inc."

சராசரியாக, மாதம் ஒன்றுக்கு 450 மில்லியன் பேர் வாட்ஸ்அப் செயலியைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. மேலும், வாட்ஸ்அப் சேவையைத் தின மும் 15 லட்சம் பேர் புதிதாகப் பெறு வதற்கு வரிசையில் நிற்கிறார்கள். செல்போனில் இருந்து மெசேஜ், வீடியோ, புகைப்படங்களைக்

கட்டணமே இல்லாமல் (நெட் இருக்கணும் உறவுகளே!) கும்ப்லிங், கும்ப்லிங் ஆக அனுப்பும் வசதி, வாட்ஸ்அப்-பில் உண்டு என்பதால், வாட்ஸ்அப்-பின் பெருமை எங்கேயோ பறந்தது. நேற்று வந்த செயலியான 'வாட்ஸ்அப்' பின் வேகமான வளர்ச்சியைப் பார்த்த பேஸ்புக், 'வாட்ஸ்அப்'பை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டால்தான், நம் வியாபாரம் ஓடும் என்று, வாட்ஸ்அப்பிற்கு ஒரு விலை வைத்தார்.

வாட்ஸ்அப்பும் அதற்கு சம்மதிக்க, 99,584 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டது வாட்ஸ்அப். உக்ரைனிலிருந்து கையில் ஒன்றுமே இல்லாமல் பிழைப்பு தேடி அமெரிக்காவுக்கு வந்த இளைஞனின் பெயர், ஜான் கோம். நண்பன் பிரையன் ஆக்டனுடன் இணைந்து ஜான்கோம் உருவாக்கியதுதான் வாட்ஸ்ஆப். பிழைக்க வழி தேடிவந்த ஜான்கோமின் கடின உழைப்பில் உருவான வாட்ஸ்அப்தான், இன்று பலரின் வேலையை எளிதாக்கி வைத்திருக்கிறது.

இனி வாட்ஸ்அப் மூலமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு (AI) அப்டேட்ஸ் பற்றி நோக்குவோம்...

Update - I

VIDEO CALL AI

வாட்ஸ்அப்பின் அட்டகாசமானதோர் நகர்வு தான் வீடியோ AI. பொதுவாக வீடியோ கோல் என்றாலே வாட்ஸ்அப் தான் செம்மயாக இருக்கும் என்பது பலரும் அறிந்தது. ஏனைய ஆப்ஸ்களை விடவும் வாட்ஸ்அப்பின் வீடியோ கோலுக் கோர் தனித்துவம் இருக்கின்றது. அந்த தனித்துவத்தை இன்னும் சிறப்பிக்கும் வகையில் மேட்டா நிறுவனம் வீடியோ யுஐ உருவாக்கி இருப்பது மிகவும் ஓர் சிறப்பான விடயம்.

இந்த வீடியோ AI என்ன செய்யப் போகின்றது என்றால் வழமையாக நமக்கு கிடைத்த வீடியோ கோல் வசதிகளை நாம் சிறிதும் எதிர்பாரா வகையில் எமக்கு பின்னாலுள்ள பேக்ரவுன்டை மாற்றிக் கொள்ளவும், டல்லாக இருக்கும் முகத்தை வீடியோ கோலில் வைத்தே பில்டர்ஸ் களை வைத்து மேக் அப் போட்டு கொள்ளவும் என பல சுவாரஸ்யமான விடயங்களை அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Update - II

FAVOURITE CHAT

வாட்ஸ்அப்பின் அடுத்ததோர் முக்கிய அப்டேட் தான் ஃபேவரைட் சாட்ஸ். ஏற்கனவே வாட்ஸ்அப்பில் பின் சாட் என்ற ஒப்ஷன் மூலமாக நமக்கு முக்கியமான சில சாட்ஸ்களை பின் செய்து வைத்திருந்தோம். ஆனாலும் அதில் குறிப்பிட்ட மூன்றை சாட்ஸ்களைத் தான் பின் செய்ய முடியுமாக இருந்தது. இப்போது அவ்வாறில்லாமல் நமக்கு எத்தனை கான்டெக்ஸ் ஆக இருந்தாலும் முக்கியமானதை ஃபேவரைட் செய்து வைக்க முடியுமான அப்டேட் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஃபேவ ரைட் செய்து வைக்கும் சாட்ஸ்களை மேலே ஃபேவரைட் சாட்ஸ் என்ற வகைக்குள் சென்றே இலகுவில் எடுத்துக் கொள்ள முடியுமாக இருக்கும்.

Update - III

EVENT PLANNER

அடுத்து இன்னுமோர் இன்ட் ரெஸ்டிங் கான அப்டேட் தான் இவென்ட் ப்ளேனர். நாம்தனிநபரோடோ, குடும்பமாகசேர்ந்தோ சில இவன்ட்களை ப்ளான் செய்வதுண்டு. அவை நேரில் செய்யப்படுவதை விட வாட்ஸ்அப்பிலேயே பேசித் தீர்மானிப்பது

தான் இப்போது அதிகம். அந்த வகையில் நாம் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்த பின் அதனை சேவ் செய்து ஞாபகமூட்டலுக்காக வைத்துக்கொள்ளவென்று ஓர் அட்டகாசமான அம்சத்தை மார்க்ஸ் அறிமுகப் படுத்தியுள்ளார். இதன்மூலமாக நாம் ஏற்பாடு செய்யும் நிகழ்வு பற்றிய ஆலோசனையை உரிய நேரத்தில் ஞாபகமூட்டி வாட்ஸ்அப் ஊடாகவே பேசித் தீர்மானிக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது.

Update - IV

PROTECT IP ADDRESS

இந்த அம்சமானது வாட்ஸ்அப் பயணிக்கும் அனைவரது பாதுகாப்புக்கும் ஓர் உறுதியான உத்தரவாதம் என்றே சொல்லலாம். வழமையாக நாம் பாவிக்கும் சமூக வலைத்தளங்கள் எமது பாதுகாப்பிற்கு மிகவும் பாதகமான நிலையிலேயே காணப்படும். நாம் தெரியாத ஒரு நபரிடமிருந்து ஒரு மெசேஜ் வரும்போது நாம் பதில் அளிப்பதால் எமது பர்சனலான விடயங்கள் ஹேக் செய்யப்பட்டு விடுமோ என்ற அச்சம் எமக்கிருக்கும். அதே போல் சில குழுமங்களில் இருந்து வரும் இணைப்புக்களை ஓபன் செய்வதால் எமது தகவல்கள் ஹேக் செய்யப்பட்டு விடுமோ என்ற அச்சமும் கூடவே இருக்கும். ஆனால் இப்போது வாட்ஸ்அப்பில் அப்டேட் செய்யப்பட்டுள்ள இந்த விடயமானது எமது தொலைபேசியின் ஐபி முகவரியை பாதுகாக்கும் ஓர் அற்புதமான அம்சமாக இருக்கின்றது. அதாவது எமது தொலைபேசியிலுள்ள அனைத்து தனிப்பட்ட விடயங்களையும் இது பாதுகாக்கின்றது.

Update - V

SECURITY NOTIFICATION

எமது வாட்ஸ்அப் பாதுகாப்பிற்கான அடுத்ததோர் ஒப்ஸன் தான் செகுரிட்டி நோடிபிகேஷன். யாரும் எமது வாட்ஸ்அப் ஊடாக எம்மை ஹேக்கிங் செய்ய முயற்சி செய்தாலோ அல்லது எமது வாட்ஸ்அப் உளவு பார்த்தாலோ உடனே கண்டறியும் முகமாக ஓர் நோடிபிகோஷனை தரும் வகையில் இந்த அட்டேட் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இது வாட்ஸ்அப்பை பயன்படுத்தும் ஒவ்வொருவருக்கும் ஓர் வேற லெவல் பாது காப்பு உத்தரவாதம் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் நமக்கே தெரியாமல் பலர் நம்மை நோட்டமிடலாம். ஆனால் அதனை சொல்லித் தர ஒருவர் இருந்தால் எவ்வளவு குஷியோ அது போலத்தான் நம்மை யார் வாட்ஸ்அப் ஊடாக கண்காணித்தாலும், ஹேக்கிங் செய்தாலும் உடனே கண்டுபிடித்து விட இந்த ஒப்ஸன் பெரிதும் உதவுகின்றது.

இவ்வாறு நாளுக்கு நாள் பல பல அப்டேட்களோடு வாட்ஸ்அப்பானது முன்னேறிக் கொண்டு எமது பாவனைக்கும், பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் தரும் வகையில் சிறப்பாய் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக எதிர்காலத்திலும் நாம் சற்றும் எதிர்பாராத பல முன்னேற்றகர அப்டேட்ஸ்களோடு வாட்ஸ் அப் தன்னை மென்மேலும் மெருகூட்டிக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பாத்திமா ஹகீமா அமினுதீன்

ஓட்டமாவடி



உளவியல் கட்டுரை

எதிர்மறை எண்ணங்கள் (Negative thoughts)

ஆர்.ஆர்.எப். ஸஸ்னா
ஹெம்மாதகம

எண்ணங்கள் தானாகவே வருவதில்லை, நாம் எதையாவது யோசித்துக் கொண்டு இருக்கும் போது ஏற்படும் அல்லது உருவாகும் சிந்தனைகளின் அதிர்வுகளால் அந்த எதிர்மறைத்தாக்கம் அதிகம் அமைந்தால் அதைத்தான் எதிர் மறை எண்ணங்கள் என்கின்றோம்.

வாழ்க்கையில் நினைத்த காரியங்கள் நடக்கவில்லை என்றாலோ திடீரென ஏதோ ஓர் இழப்பு ஏற்பட்டாலோ எதிர்மறை எண்ணங்கள் தோன்றும். இதற்கு நம்மைச் சுற்றிப்பல காரணங்கள் இருக்கின்றன.

எதிர்மறையான நம்பிக்கை கொண்டவர்களுடன் பழகினால்கூட நமக்கும் அந்த பிரச்சினை ஏற்படலாம்.

ஒன்று ஒன்றாக அதிகரித்து ஒன்று சேர்த்து நமது ஒட்டுமொத்த வாழ்வையே ஒன்றுமே இல்லாமல் செய்து விடுகின்றது நம் எதிர்மறை எண்ணங்கள். மனிதர்களின் இலகு தொழில் எப்பொழுதும் இன்னும் ஒருவரை சாட்டி விட்டு தப்பித்துக்கொள்ள நினைப்பது. தன்னகத்து காரணங்களை

ஆராய்வதில் தவிர்த்துக் கொள்வதுதான்.

வீட்டில் எதிர்மறை எண்ணம் உள்ள வர்கள் இருந்தால், அந்த வீட்டில் பல பிரச்சனைகள் நிகழும். எந்த விஷயத்திலும் எளிதில் முடிவு எடுக்க முடியாது. எடுத்த முடிவுகள் பிழையென உணர காலம் சென்றிருக்கும் வாழ்வும் முடிந்திருக்கும்

உங்கள் எதிர்மறை எண்ணங்களுக்கு பின்னால் இருக்கும் ரகசியம் என்ன தெரியுமா?

எதிர்மறை அனுபவங்களில் தான் அதிக கவனம் செலுத்த முனைகின்றோம். பெரும்பாலும் இங்கு ஒரு நல்ல செய்தியை விட கெட்ட செய்திகள்தான் அதிக தாக் கத்தை ஏற்படுத்துகின்றன.

இதற்குக் காரணம், நேர்மறையான நிகழ்வுகளை விட எதிர்மறை நிகழ்வுகள் நம் மூளையில் அதிக தாக்கத்தை ஏற்ப டுத்துகின்றன.

மேலும் இது உங்கள் நடத்தை, உங்கள் முடிவுகள் மற்றும் உங்கள் உறவுகளில் கூட ஒரு ஆபத்தான விளைவை ஏற்படுத்தும்.

எதிர்மறை எண்ணங்கள், பதற்றம் மற்றும் மன அழுத்தம் ஆகியவை நரம்பியல் சார்ந்த நோய்கள் மற்றும் டிமென்ஷியா என்ற மறதி நோயை உண்டாக்க கூடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்

எதிர்மறை எண்ணங்களை குறைத்துக் கொண்டால் முதுமையில் ஏற்படும் நோய்களை தவிர்க்கலாம் - என்று ஆய்வு கூறுகின்றது

எவ்வாறாயினும் எதிர்மறை எண்ணங்கள் மனதில் தோன்ற ஆரம்பித்துவிட்டால் உடனே அதனை அகற்றி விட வேண்டும்

நடக்காது, சரியாகிவிடாது என்பது போன்ற எதிர்மறை வார்த்தைகளைப் பேசாதீர்கள். நடக்கும் என்று நம்புங்கள். இதுவும் ஒரு அனுபவமே என்று நேர் மறையாக கருதுங்கள்.

அனுபவங்களும், கஷ்டங்களும் வாழ் வின் முடிவள்ள நம்மை சுற்றி உள்ள வர்களை ஆராய கிடைக்கும் வாய்ப்புக்கள் நாமாக அதை சரி செய்ய வேண்டும். அல்லது நாம் நமது வேலை என கடந்து செல்ல வேண்டும். எதிமறையான எண்ணங்களின் முடிவுகள் நினைத்திராத இழப்புக்களை வாழ்நாள் காலம் முழுவதும் ஏற்படுத்தும்.

வாழ்க்கை ஏதோ சொற்ப காலம்தான் அதிலும் பாதி குழந்தையாக, நோயாளியாக, வயோதிபராக எனக் கடந்துவிடும் சொட்ப கால வாழ்க்கையில் நேரான (positive) சிந்தனைகளுடன் சந்தோசமாக வாழலாமே.

நரம்பு சுருட்டல் சரியாக...

வசம்பு , மஞ்சள் , துளசி மூன்றையும் சம அளவு எடுத்து கற்றாழையில் அரைத்து பூசி 2 மணி நேரம் உலர விட்டு பின் கழுவ வேண்டும் , இவ்வாறு 20 நாட்கள் தொடர்ந்து செய்து வந்தால் நரம்பு சுருட்டல் சரியாகும்

சந்தேகம்...

காலை நேரம் பத்து மணி இருக்கலாம். மூன்றாம் பாடம் எனக்கு ஃப்ரீ என்பதால் ஸ்டாப் ரூமிற்குள் அமர்ந்து ஒன்பதாம் வகுப்பிற்குரிய செயலட்டைகளைத் திருத் திக் கொண்டிருந்தேன்.

ஏற்கனவே அங்கு நிலைகொண்டிருந்த இரண்டு ஆசிரியர்கள் பாடவேளைக்கான பெல் சத்தத்துடன் வகுப்பறைக்குச் செல்ல ஆயத்தமாகிறார்கள்

"இவவை உங்களுக்குத் தெரியுமா ரீச்சர்..?" என்று ஒரு பெயரைச் சொல்லிக் கேட்கிறார் ஏழெட்டு வருடமாக ஒரே பாடசாலையில் என்னோடு ஒன்றாகக் கற்பிக்கின்ற என் ஆசிரியத் தோழி.

"இந்தப் பேரில எனக்கு மூணு பேரைத் தெரியும் ரீச்சர். நீங்க யாரைக் கேட்கிறீங்கண்டு விளங்கலையே...!" என்கி றேன் நான்.

நின்று, நிதானித்து கொஞ்சமாய் யோசித்துக் குறித்த அடையாளங்களைச் சொல்கிறார் அவர்.

"ஓம்.அவவை எனக்கு நல்லாத் தெரியுமே.."

என்றபடி அவரின் குணம், இயல்புகள், குடும்பம், கணவர், பிள்ளைகள் என எனக்குத் தெரிந்த அவர் கேட்ட நபரின் அனைத்தை யும் சொல்கிறேன் நான் பரீட்சைத் தாளில் விடை தெரிந்த ஒரு வினாவைக் கண்ட மாணவனின் பூரிப்போடு .

"ஓஹ்...!"

என்றவர், கொஞ்சம் சலிப்பாக .." எல் லாம் சரி ரீச்சர்..அவ ஆள் எப்படி..?" என் கிறா திரும்பவும்.

குறித்த நபர் பற்றி நான் சொல்லாத வேறு ஏதோ ஒன்றை இவ அறிய விரும்புகிறா என்று மட்டும் எனக்கு விளங்கியது.

பிறகு மெதுவாக இன்னமும் என்னிடம் நெருங்கி வந்து என் கைகளைப் பிடித்துக் ஒரு விசயம் சொன்னபோது உண்மையில் அதிர்ந்துதான் போனேன் நான்.

அவ சொல்லி முடிக்குமுன்பே மிக அவச ரமாய் கைகளை உதறியபடி "இல்ல மா.. அப்படி இருக்காது. அவ அப்படிப் பட்டவ இல்லை.இது உங்கட மிச்சம் பிழையான புரிதல்." என்கிறேன் நான்.

அவவுக்கும் கொஞ்சம் யோசனை. என் னிடம் குறித்த விடயத்தைத் தான் பகிர்ந்தி ருக்கக் கூடாதோ என்ற சிறிய பதாட்டமும் அவரைத் தொற்றிக் கொள்ள கையில் இருந்த டிஷுவால் முகத்தில் சட்டெனப் படர்ந்த வியர்வையை ஒற்றிக் கொள்கிறார் என்னருமைத்தோழி.

அவரைப் பார்க்க எனக்கும் கொஞ்சம் சங்கடமாகி விட்டது.

உண்மையில் " யாரையும் பற்றி என்னசரி சொல்லிக் கொண்டு போகட்டுமே...நமக் கென்ன ஒரு சுவாரஸ்யத்திற்காக தெரிஞ்சது தெரியாதது எல்லாம் சேர்த்து நாமளும் கொஞ்சம் அடிச்சு விடுவோமே"

என்று இந்த சந்தர்ப்பத்தில் நானும் நினைத்து இருந்தால் சிலநேரம் இந்த உரையாடல் வேறு திசையில் நகர்ந்து இருக்கக் கூடும். ஆனால் அதற்கு நம் மனசாட்சி ஒருபோதும் ஒத்துழைக்க போவதில்லையல்லாவா.

என் தோழியைக் கொஞ்சம் இயல்பு நிலைக்குக் கொண்டு வர "ச்சரி மா ..எதை

வெச்சு நீங்க அவ பற்றி இப்படி ஒரு முடிவுக்கு வந்தீங்க..” என்று மறுபடியும் கேட்கிறேன் நான்.

அவ இன்னமும் மெதுவாக ஸ்டாப் ரூமுக்குள் இடைக்கிடை வந்துபோகும் பிற ஆசிரியர் காதில் விழாதவாறு குசுகுசுக்கத் தொடங்கியது இதைத்தான்.

வெளியூரைச் சேர்ந்த அந்த உயரதிகாரி இவவின் வீட்டில் இருந்துதான் (வெளி யூரைச் சேர்ந்த அந்த உயரதிகாரி என் தோழியின் நெருங்கிய உறவினர்). அலு வலகம் செல்கிறார்.

கிழமையில் ஒரு தடவை மட்டும் ஊருக்கு போய் வருவார்.

அவரின் துணைவியார் நேற்று கோல் எடுத்து இவரிடம் குறித்த பெண்ணாசிரியர் பற்றி விசாரித்து இருக்கிறா. இவவும் தனக்கு அவரைப் பற்றி எதுவும் தெரியாது என்று கூறி விசாரித்து பார்த்துச் சொல்கிறேன் என்று விட்டுதான் என்ன காரணத்திற்காக இவவை என்று விசாரித்து இருக்கா. அப்போதுதான் அந்த உயரதிகாரியின் துணைவியார் குறித்த பெயர் கொண்டவர் தன் கணவருக்கு அடிக்கடி அழைப்பை மேற்கொள்வதாகவும் அதுவும் இரவு பத்து மணிக்குப் பிறகு அல்லது விடியற்காலை நாலரை ஐந்து மணிக்கெல்லாம் எடுத்து இருப்பதாகவும் கூறி இருக்கா. கணவர் வெளியூரில் வேலை என்பதால் வீடு வரும் நேரம் அவரின் அலைபேசியை எடுத்து call history செக் பண்ணி இருக்கா. அப்போதுதான் குறித்த பெயர் கொண்ட இலக்கத்தில் இருந்து இப்படி அழைப்புகள் அடிக்கடி வந்திருப்பது கண்டு கொஞ்சம் அதிர்ச்சியும் சந்தேகமும் கொண்டு இவரி டம் விசாரித்து இருக்கா.

அதோட இதுபோதாதென்று இந்தப் பெண் என் தோழியின் வீட்டிற்கும் அடிக்கடி வந்து குறித்த அதிகாரியிடம் பேசி இருக்கா. அத்தோடு வரும் நேரம் எல்லாம் இறால், கருவாடு, மற்றும் ஊரில் விசேடமாக காணப் படுகின்ற உணவுப் பொருட்கள் எல்லாம் கொண்டு வந்து “இதை சேருக்கு சமைச்சுக் குடுங்க மா”என்றெல்லாம் கொடுத்து போய் இருக்கா.

இதெல்லாம் அந்த அதிகாரியின் மனை விக்கும் என் தோழிக்கும் அந்தப் பெண்ணின் நடத்தையில் கொஞ்சம் அதிருப்தியையும் சந்தேகத்தையும் உண்டு பண்ணி இருக்கிறது.

இவைகளை என் தோழி விவரித்தபோது உண்மையில் எனக்கு குறித்த பெண் மேலே ஒரு பரிதாப உணர்வே வந்தது.

ஒரு பதவி உயர்வைப் பெற்றுக் கொள்வதற்கு என்று சில வழிமுறைகள் உள்ளன. அவற்றை நடைமுறைப் படுத்தி மட்டுமே நாம் குறித்த பதவி உயர்வுகளை அடைய முயற்சிக்க வேண்டும்.

அதை விடுத்து தனிப்பட அதிகாரி களிடம் தொலை பேசியில் பேச வெளிக்கிடுவது அல்லது அலுவலகம் தாண்டி தனிப்பட சந்திக்க சந்தர்ப்பங்களை அமைக்க விரும்புவது எல்லாம் குறித்த பெண் ணின் ஒழுக்கத்தில் அடுத்தவர் சந்தேகம் கொள்ளத் தூண்டும் நடைமுறைகள் ஆகும்.

ஒரு ஆண் என்னதான் நம் துறை சார்ந்து அல்லது பணி சார்ந்து நமக்கு நெருக்கமானவர் என்றாலும் அதையும் தாண்டிய நெருக்கமான ஒரு உறவுமுறையாக அவரின் கணவர் / மனைவி என்ற மிக நெருங்கிய வாழ்க்கைத் துணை என்ற இடத்தில் ஒருவர் இருப்பார்.

அவர் எப்போதும் தன் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைக்கும் விடயத்தில் தான் மிக அக்கறையுடன் இருப்பார்.

அதிலும் வெளியூரில் வேலை செய்யும் வாழ்க்கைத் துணை தொடர்பில் உள்ளார்ந்த ஒரு அச்சம் எப்போதும் இருக்குமல்லவா..

என் ஆசிரியத் தோழி சொல்லிக்

கொண்டே போகிறார். எனக்கு இதற்குள் உள்ள சிக்கல் என்ன வென்று இப்போது தெளிவாக விளங்கி விட்டது.

கொஞ்சம் புன்சிரிப்புடன் நான் என் தோழியை நெருங்கிச் சென்று விடயத்தை சொல்ல வெளிக்கிட்ட நேரம்.. என்னவொரு ஆச்சரியம்.. திரைப் படங்களில் வருவது போல ஒரு ஆச்சரியமான காட்சி.

குறித்த அதே பெண் அண்மையில்தான் அதிகாரியாக பதவி உயர்வு பெற்று எம் பாடசாலைக்கு மேற்பார்வைக்கு வந்து இருக்கிறார். வந்தவர் நானும் இதே பாடசாலை என்றதும் என்னை தேடி வந்து தமக்கு குறித்த பதவி கிடைத்த விடயத்தை சொல்லி உற்சாகமாய் ஒரு குழந்தையைப் போல என்னை இறுக்கி அணைத்துக் கொள்கிறார்.

பக்கத்தில் இருந்த என் தோழியைக் கண்டதும் இன்னும் பல மடங்கு உற்சா கத்துடன் அவரிடமும் விடயத்தை கூறி, மிகுந்த வாஞ்சையுடன் அந்த மேலதிகாரி யையும் சுகம் விசாரித்து அவருக்கு தனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரி விக்க சொல்கிறார்.

கள்ளங்கபடமில்லாத அந்தப் பெண் ணின் வெகுளித்தனமான இந்த செயல்கள் என் தோழிக்கு கொஞ்சம் ஆச்சரியத்தை தந்து இருக்க வேண்டும். அமைதியாய் எங்களின் உரையாடல்களை பார்த்துக் கொண்டு இருந்து விட்டு வகுப்பிற்கு போய் விட்டார்.

பிறகு குறித்த பெண் என்னிடம் விடைபெற்று அலுவலக அறைக்குள் செல்வதை அவதானித்த என் தோழி மறுபடியும் என்னிடம் வந்து "ரீச்சர் இவ இவ்வளவு அப்பாவியா இருப்பா என்று நான் கனவிலும் நினைக்க வில்லையே" என்று லேசா சிரிக்கத் தொடங்கி விட்டா.

உண்மைதான். அவ படித்த, பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்ற, தற்போது அதிகாரியாகவும் மாறிய ஒரு பெண். ஆனா இப்படியான வெள்ளந்தி மனம் இவட பலமா, இல்லை பலவீனமா என்று எனக்கும் சிலநேரம் தெரியாம குழப்பமாக இருக்கும் மா" என்றபடி அவ தொடர்பில் எனக்குத் தெரிந்த நேர்மையான குணங்களை எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்க..என் தோழி கொஞ்சம் குற்றவுணர்வுக்கு ஆளாகி" ரீச்சர் நான் அவவை பிழையாக விளங்கிக் கொண்டு நிறைய சந்தேகப் பட்டு விட்டேன். அவவிடம் மன்னிப்பு கேட்கப் போரன் அப்பதான் என் மனம் ஆறும் என்றபடி மாடிப் படியில் இறங்க வெளிக்கிடும்போது குறித்த பெண் அதிகாரி எங்கள் பாடசாலை கேற்றைத் தாண்டி வெளியே போய் கொண்டிருக்கிறார்.

அதை நான் என் தோழிக்கு காட்டிய போது "அட, நான் பிழ விட்டுட் டேன்ரீச்சர்... அவவை வீணா சந்தேகப் பட்டு பாவத்த எண்ட தலைக்கு மேலே அள்ளிக் குவிச்சு போட்டேன்... இனி இவ நம்ம பள்ளிக் கூடத்திற்கு எப்ப வருவாவோ"

என்று என்னைக் கேட்கிறா.

"எனக்கென்னமா தெரியும்

அவ வருவாவா என்டு யோசிச்சி ஒங்க மனச சும்மா போட்டுக் கொழப்பிக் கொள் ளாம மொதல்ல மனசார அல்லாட்ட மண்ணிப்பு கேட்டு கொள்ளுங்க மா" என்கிறேன் நான்.

எஸ். ஃபாயிஸா அலி

எதிர்காலத் தலைவனுக்கு

மர்ளியா சக்காப் - திருகோணமலை.

ஓராயிரம் வார்த்தைகளுண்டு
உன்னிடம் இயம்ப.
அவை முடிவிலியற்றதாய்...
மாற்றங்கள் விரைவில்
நிகழ்வதில்லையாதலால்,
உடனே எதிர்பாக்கவில்லை நான்.

“தோழரே” என்றழைக்குமந்த
மந்திர வார்த்தையில்,
பெரிதும் மகிழ்கிறேன்.
அந்த ஒற்றை வார்த்தையின்
தனித்துவத்தில்,
மனம் காவுபோனதோர்
ரசிகையாகிறேன்.

ஏழ்மையின் வலையில்
சிக்கிக் கிடந்ததால்,
விளக்கிடவேண்டிய
தேவையொன்றுமில்லை.
குறைவுறாத சேவைகளை,
வழங்கவெல்லாம்,
உன்னால்மட்டுமே முடியும்.
தேசிய ஒருமைப்பாடு,
ஒற்றுமை என்றெல்லாம்,
பதாகை ஏந்திய கூட்டமொன்று,
ஆளுக்கொரு பக்கம் அலைபாயச்செய்யும்.
இதெல்லாம் உனக்கு,
விலக்கப்பட்டவையென
கருதிக்கொள்.

அஞ்சா நெஞ்சுடன்
தியாக சிந்தனை சூடி
சுதந்திர வானில் பறக்க
உனக்குமிருக்கிறது உரிமை.
பதவி தேவையற்றவன் நீ
உன்னை அலங்கரித்துக் கொள்ள

எதிர்காலமானதுன்
திட்டமிடலில்
சுபீட்சம் பெறட்டும்.
வாழ்த்தும் அவாவுடன்,
காத்திருக்கிறேன் உணர்ந்திரு.

இன்றைய கல்விமுறையும் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்

ஏ.எம். கஸ்பியா வீவி

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்

பிரதேச செயலகம்

அட்டாளைச்சேனை

கல்வி என்பது காலத்தால் அழியாத செல்வமாகும். இச்செல்வத்தை பெறவே இன்று நேர காலம் மறந்து ஓடிக் கொண் டிருக்கின்றோம். ஐம்பூதங்களால் அழியாத, யாராலும் திருட முடியாத செல்வம் தான் கல்விச்செல்வம். இதனால் தான் சீனா தேசம் சென்றாயினும் சீர் கல்வியை தேடுகின்றனர். மாணவர்களை பொறுத்தவரை 16 வயது வரை கட்டாய கல்வி பெறுவது அவசி யமாகும். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை 18 வருட கலைத்திட்ட கற்றல் செயல்பாடு மூலம் மாணவர்களின் திறமை கள் இனங் காணப்பட்டு சாதாரண தரம் சித்தி அடையாத அல்லது பாடசாலை கல் வியை இடை நிறுத்தினால் இவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகின்றது. இதைவிட தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் என ஆரம்பம் முதல் உயர் கல்வி வரை இலவ சமாக கல்வியை போதிக்கின்ற ஒரே நாடு எமது இலங்கை நாடாகும்.

1989 ஆம் ஆண்டு ஐ.நா சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட சிறுவர் உரிமை சாசனத்தில் கையொப்பம் இட்டதிலிருந்து சிறுவர் உரிமைகளை பாதுகாக்கவும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் அதீத அக்கறையை காலத்திற்கு காலம் வரும் அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தி வரு கின்றன. அந்த வகையில் சிறுவர்களின் உரிமைகளில் ஒன்றாக உறுப்புரை 28 இல் கல்வி பற்றி கூறப்பட்டுள்ளது. இதே போல் உறுப்புரை 29 இல் கல்வி யின் நோக்கங்கள் பற்றி குறிப்பிட்டு சிறுவர்களின் ஆளுமையையும் திறமையும் முழுமையாக விருத்தி செய்து ஏனைய வரின் உரிமைகளுக்கு மதிப்பளித்து இயற்கை சுற்றாடலை பாதுகாத்துக் கொண்டு வாழ்வதற்கும் சிறுவர்களை தயாராக் குவதற்கு கல்வி வழங்கப்பட வேண்டுமென

கூறப்பட்டுள்ளது.

இதற்கு அமையவே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் கட்டாயமாக இவற்றை ஒவ்வொரு அரசாங்கமும் கடைப்பிடித்து வருகின்றது இதற்காக காலத்திற்கு ஏற்றார் போல் பாட விதானங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கு ஏற்றாற் போல் துறை சார்ந்த அதிகாரிகள் மூலம் வடிவமைத்து எதிர்கால சந்ததியை வளமாக்குவதற்குரிய செயல்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இன்றைய கால கல்வி நிலையில் மாணவர்கள் பல்வேறு சவால்களை எதிர் நோக்குகின்றனர் இன்றைய கல்வி முறையானது புள்ளிகளால் மாணவர்களின் திறமையை மதிப்பிடுகின்றது. ஆளுமை, திறமை புத்தாக்கம், படைப்பாற்றல் பேச்சாற்றல், வாசிப்பு என்பன குறைந்துள்ளது எனலாம். இன்று மூன்று வயதினிலே மாணவர்களை முன் பள்ளிக ளில் இணைக்கின்றனர். இங்கு இரு வரு டங்கள் அல்லது மூன்று வருடங்கள் கற்றபின் ஆரம்ப பாடசாலைகளில் இணைக்கப்படுகின்றனர். இங்கு தரம் ஐந்து புலமைப் பரிசில்பரிட்சையை மையப் படுத்தி சிறுவர்களை தயார் படுத்துகின்றனர். இக்கால பகுதியில் பரீட்சையை மையப்படுத்தி தயார்படுத்தல்கள் இடம் பெறுவதால் மாணவர்களின் ஆற்றல் விருத்திக்கான விளையாட்டுகளோ அல்லது இதர செயல்பாடுகளுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. தற்கால அரசாங்கம் இதற்கு தடை விதித்துள்ளது. பரீட்சை நடந்தாலும் அதற்குரிய ஒட்டுப் புள்ளிகள் வெளியிடப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது. இருப்பினும் பெற்றோர்கள் பிள்ளைகளை விடுவதாய் இல்லை மூச்சு விடக் கூட நேரமில்லாமல் பாடசாலை, வீடு, பிரத்தியேக வகுப்பு என கண் விழித்து எழுந்ததிலிருந்து இரவு உறக்கத்திற்கு செல்லும் வரை பிள்ளைகள் படாதபாடு படுத்துகின்றனர். பிள்ளைகள் ஆடி ஓடி விளையாட நேரமில்லாது உடல் பருமனாகி சிறு வயதிலேயே உயர் குருதி அமுக்கம், நீரிழிவு, உடற்பருமன், போசாக்கு குறைபாடு, கண்பார்வை இழத்தல் போன்ற நோய் நிலைமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். இதைவிட மன அழுத்தத்திற்கு உட்பட்டு மிகவும் உடல் ரீதியான கடுமையான பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எமது கல்வி முறையானது அண்மை காலங்களில் டிஜிட்டல் மயப்படுத்தப் பட்டதாகவே காணப்படுகின்றது. ஸ்மார்ட் வகுப்பறைகள் திட்டத்தின் மூலம் பாட சாலைகளில் கல்வி டிஜிட்டல் ஊட கங்கள் ஊடாகவழங்கப்படுகின்றது. இதனால் அதிக நேரம் ஒளி திரைகளுக்கு முன் மாணவர்கள் தங்கள் நேரங்களை செலவிடுகின்றனர் இதனால் பார்வை குறைபாடு, தலைவலி, கண்ணில் இருந்து நீர் வடிதல் போன்ற உடல் பிரச்சனை களை எதிர் நோக்குவதோடு டிஜிட்டல் திரைகளுக்கு பழக்கப்பட்டதன் விளைவாக அவர்கள் ஏனைய இணையவழி விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த அம்சங்களில் ஈடுபட்டு அதற்கு அடிமையாகி மிகவும் பாதிக்கப்பட்ட நிலைமையை அவதானிக்க முடிகின்றது. இதற்கு ஆதாரங்களாக பிரதேச வைத்திய சாலைகளில் உளநல பிரிவு மற்றும் சிகிச்சை முகாம்களில் சிகிச்சை பெறும் சிறுவர்களை கூறலாம்.

இதைவிட அண்மை காலத்தில் எமது நாட்டை தாக்கிய கொரோனா நோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டு காணப்பட்டது. இதன் மூலம் நிகழ்நிலை கல்வி அதாவது zoom தொழில்நுட்பத்தின் ஊடாக பாடசாலைகளில் பாடங்கள் நடத்தப்பட்டது. வாட்ஸ்அப் குரூப்களின் ஊடாக கற்றல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் அனைவர் கைகளிலும் கைத்தொலை பேசி தவழ்ந்து விளையாடும் நிலை ஏற்பட்டது. பிள்ளைகளின் பாவனைக்காக எப்பாடுபட்டாவது

பெற்றோர்கள் இவற்றை கொள்வனவு செய்து கொடுத்துள்ளனர். இதைப் பற்றிய அறிவு பெற்றோர்களுக்கு குறைவாகவே இருந்தது. இதனால் தனது பிள்ளை எப்படியாவது படித்து விட வேண்டும் என்பதற்காக படிப்பதற்கு என்று தனி அறைகளை ஏற்பாடு செய்து கொடுத்து கைக்தொலைபேசிகளையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு பிள்ளைகள் மீது உள்ள நம்பிக்கையினால் பெற்றோர்கள் தமது வேலைகளில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் காரணமாக தமக்கு கிடைத்த சந்தர்ப்பமாக இதை கருதிக் கொண்டு பிள்ளைகள் சமூக வலைத் தளங்கள் மற்றும் தடை செய்யப் பட்ட விளையாட்டுக்கள் பாலியல் தொடர்பான சமூக வலைத்தளங்கள் என்பவற்றின் ஊடாக உட்பிரவேசித்து நமது அனுப வத்திற்கு அல்லது வயதுக்கு மீறிய செயற் பாடுகளில் ஈடுபட்டு போலியான முகநூ ல் நட்புக்கள் மற்றும் உறவுகளுடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு தமது எதிர்காலத்தை சீரழித்து சின்னாபின்னமாக கூடிய நிலைமையும் இன்று அதிகரித்து வருகின்றது. இதற்கு அண்மைக்காலங்களில் வெளியான பத்திரிகை மற்றும் ஊடக செய்திகள் சான்று பகர்கின்றன.

இன்றைய காலத்தில் பாடசாலை கல் வியை விட பிரத்தியேக வகுப்புக்களின் வகிபங்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றது. இங்கு பணம் ஒரு தேவையாக இருப்பதால் எல்லோராலும் இதனை பெற முடியுமா எனக் கேட்டால் இல்லை என்றே பதில் வருகின்றது. பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி அதிகரிப்பு என ஒரு வேளை உணவுக்கு கூட வழியின்றி பிள்ளைகள் உள்ளனர்.பணம் கொடுப்பதற்கு வசதி உள்ள பிள்ளைகள் மாத்திரம் இன்று படிப்பை தொடர்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இதனால் சில மாணவர்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்திவிட்டு குடும்பத்தை பார்க் கவும் பராமரிக்கவும் தொழில் முயற் சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. பருவ கால தொழில் மற்றும் சிறிய வீட்டு வேலைகள் என்பவற்றுக்கு குறைந்த ஊதியத்தில் அதிக வேலை செய்யும் நிலைமை அதிகரித்து காணப்படுகின்றது. இவ்வாறு தொழில் செய்வதில் நாட்டம் காட்டுவதன் காரணமாக பாடசாலை இடை விலகல் அதிகரித்து வருகின்றது.

இது மாத்திரமன்றி இன்றைய கால கட்டத்தில் பேருக்கும் புகழுக்குமாகவே கல்வி கற்கும் நிலை காணப்படுகின்றது. பிள்ளைகளின் ஆசை, விருப்பம் என்பவை கருத்தில் கொள்ளப்படாது பெற்றோர்களின் விருப்பம், உறவுகளின் விருப்பம், ஆசிரியர்க ளின் எதிர்பார்ப்பு என்பவற்றுக்கு சுமக்க முடியாத சுமைகளை சுமந்து தன்னால் ஒரு சட்டத்தில் இது முடியாது என்ற நிலைமை வரும் போது மாணவர்கள் அதிக மன அழுத்தத்திற்கு உட்பட்டு தற் கொலை வரை சென்ற சம்பவங்களும் அதிகரித்துள்ளன. மன உளைச்சல் மனச் சோர்வு, நித்திரையின்மை, பசியின்மை, பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாத தன்மை, பரீட்சைகளின் போது ஏற்படும் பயம் போன்ற இன்னொரன்ன உளவியல் பிரச்சனைகளும் இன்றைய சிறுவர்கள் மத்தியில் அதிகரித்து காணப்படுகின்றன.

எல்லாவற்றையும் தாண்டி மாணவர்கள் படித்து பட்டம் பெற்று வெளியேறியவுடன் தொழில் பெறுவது பாரிய இடர்பாடாக காணப்படுகின்றது. இதற்கு காரணம் படிப் பது ஒன்று ஆனால் தொழிற்சந்தை வேறு ஒன்றாக உள்ளது

தொழில்நுட்பம் மற்றும் தொழில் வாய்ப்பிற்கு ஏற்றாற் போல் மாணவர்கள் தமது கற்றல்களை முன்னெடுக்க வேண்டும்

இதற்கான வசதிவாய்ப்புகளை பாட சாலைகளும் ஆசிரியர்களும் வழங்கி எதிர் காலத்தில் ஆளுமை மிக்க சிறுவர் சமு தாயத்தை உருவாக்க எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற் கொள்வோம்

Super heros...!

Mothers are obligated
To know everything
And be devoted...

Waking up at the dawn
A habit they should form
Cooking on time
A task they should shine
Choices of kids
May vary> but
Taste of each member
Mothers should remember

Why the baby cries
Hungry> agony or sleepy
mothers to know the logic
And be the wand of magic

Make the crying ones laugh
And the quarrelling ones to pacify
A long list to mollify
Mothers should be qualified

When kids begin schooling
Mothers start exploring
More about the subjects
And seek clarity of the projects
Nothing they can neglect
With soaring price
And shortage of gas
Scarcity of food
And paucity of goods
Mothers should still find ways
To provide meals every day

To keep the house clean
And maintain a garden of green
Mothers should be keen
They have to be super beings

Amidst of all the constraint
Mothers should manage the time
With a graceful> elegant look
They should stand and rock

Mothers are obligated
To know everything
And be devoted...!

**(Tamil poem by Shifana Azeem
Translated by Mareena Ilyas
Shafee)**

அம்மாக்களென்றால்
அவள்களுக்கெல்லாமே
தெரிந்திருக்க வேண்டும்

ஒவ்வொரு நாளும்
அதிகாலையிலேயே
நேரம் தவறாமல்
எழுந்திருக்க தெரிய வேண்டும்

தாமதிக்காமல்
சமைக்கத்தெரிந்திருக்க
வேண்டும்
எல்லாநாளுமே
சுவை குறையாமல்
சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்

இப்போது
யாருக்கென்ன வேண்டும்
யாருக்கெது வேண்டாம்
அவளுக்கதுவெல்லாமே
துல்லியமாக தெரிந்திருக்க வேண்டும்

எதற்காக குழந்தை
அழுகிறது
பசிக்கா
வலியா
தூக்கமா
எனப் புரிந்து கொள்ளும்
கூருணர்வு அவளுக்குத்தான்
தெரிந்திருக்க வேண்டும்

அழும் குழந்தையை
சிரிக்க வைக்கும்
சண்டைபிடிக்கும் குழந்தைகளை
சமதானப்படுத்தும்
சாப்பிடாமல் அடம்பிடிக்கும்
குழந்தையை சாப்பிட வைக்கும்
வித்தையெல்லாம்
அவளுக்குத்தான்
தெரிந்திருக்க வேண்டும்

எல்லாப் பள்ளிப்பாடங்கள்
பற்றிய அறிவும் தெளிவும்
அவளுக்குத்தான்
தெரிந்திரிக்க வேண்டும்

விலையேற்றம்
கேஸ் தட்டுப்பாடு
பொருட்கள் தட்டுப்பாடு
எல்லாவற்றையும் சமாளித்து
மூன்று வேளை
பசியாற்றும்
பொருளாதார நிபுணத்துவம்
அளுக்குத்தான் தெரிந்திருக்க வேண்டும்

வீட்டை நேர்த்தியாகவும்
சூழலை சுத்தமாகவும்
வைத்திருக்கும்
கலையும் அவளுக்குத்தான்
தெரிந்திருக்க வேண்டும்

இத்தனைக்கும் மத்தியில்
நேரமொதுக்கி
பார்ப்பதற்கு மகாலட்சுமியாய்
லட்சணமாக காட்சியளிக்கும்
நேர முகாமைத்துவமும்
அம்மாக்களுக்குத்
தெரிந்திருக்க வேண்டும்

அம்மாக்களென்றால்
அவள்களுக்கெல்லாமே
தெரிந்திருக்க வேண்டும்

ஷி:.பானா அஸீம்

ஷுஹதாக்கள் அவர்கள்

நாடெல்லாம் வெள்ளம்
நடமாடிப்போகையில்
நானொன்று கேள்விப்பட்டு
கதியற்றுப்போனேன்

கண்களில் நீர் வழிய
காரணமும் அதுதான்
காணாமல் போன
ஷுஹதாக்களை எண்ணி

இறை வசனங்களை சுமந்த
கல்புகளாம் அவைகள்
ஏக்கங்கள் நிறைய
என்னை ஏந்தித்தான் பிடித்து
நான் தடுமாறிப் போனாலும்
தடம் மாறிப் போனாலும்
பெற்றெடுத்த உள்ளங்களின்
துயரைத் தான் மிஞ்சிடுமா!

கேட்போர்க்கு அது செய்தி
பெற்றோருக்கும் உற்றாருக்கும்
பேரிழப்பே அதுதான்

பரிதவிக்கும் நெஞ்சங்களை
எதைச் சொல்லிப் பாதுகாக்க
வார்த்தைகள் தெரியாத
வதைக்கப்பட்ட ரணங்களவை

அள்ளுண்டு சென்ற
அறியாத பிஞ்சுகள்
எத்தனை நாள் கழிந்து
கொடுக்கப்பட்டது
ஷுஹதாக்களாய் பெற்றோரிடம்
இன்னும் நினைக்கையிலே
இனமறியா தடுமாற்றம்
ஏதுமறியா பேரிழப்பு
எந்நிலை இதென்றால்
அவர்கள் கதி என்னாகுமோ

இரக்கமுள்ள இறைவனே!
பெற்ற மனங்கள்
அத்தனையும் பத்திரமாய்
பதப்படுத்திடு! ஜன்னாஹ்வின்
வாரிசுகளாய் அவர்களோடு நாமும்
கைகோர்த்திட
உன் இரக்கத்தை எம்மீதும்
பொழிந்திடு!

ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்
(இஸ்லாஹி)
புல்மோட்டை



இயற்கை அனர்த்தங்களும் இஸ்லாமும்

எஸ்.யூ.கமர்ஜான்பீபீ (J.P) - Diploma in Psychology

இறைவன் அருளாளன். அன்புடையோன். அகிலம்படைத்து பரிபக்குவப்படுத்துகின்றான். கோடான கோடி ஜீவராசிகளையும் இன்னும் எண்ணிலடங்கா உயிரினங்கள், மனிதன், ஜின்கள் போன்ற உயிரினங்களையும் படைத்து உணவளித்துக் காக்கின்றான். 'குன்' என்ற சொல்லுக்குள் எல்லாம் ஆரம்பித்து முடிவடையும் என்றாகிறது.

இத்தனையும் இறைவன் தன்னை வணங்குவதற்காகவே படைத்தான். ஆக்கவும், அழிக்கவும் சக்தியுடையோனாய் அவனே இருக்கின்றான். இயற்கை அனர்த்தங்கள் எனும் போது அவனறியாது அணுவும் அசையாது எல்லாம் அவன் எண்ணப்படியே நடக்கின்றது.

உலகை படைத்ததெல்லாம் அவனை வணங்குவதற்காகவேயன்றி வேறில்லை. வாழ வழியும் அமைத்துக் கொடுத்து நன்றி உள்ள மாமனிதனாய் வாழ வழிகாட்டி தந்துள்ளான். ஆனால் மனிதன் மனிதனாக வாழாது மடமையுள்ளவனாய், இறைவனுக்கு மாறு செய்பவனாய் இருப்பது இறை கோபத்துக்குள்ளாக்கப்படுகின்றது. கோபம் கொண்ட இறைவன் தன் கட்டளையின் நிராகரித்தலினால் தான் உண்மையாகவும் மேலும் பயந்து தன்னை சோதனைக்குள்ளாக்குகின்றான். அவ்வப்

போது மாறு செய்யும் மனிதர்களை அச்சமூட்டி எச்சரிக்கையும் செய்வதே அனர்த்தங்களாக பரிணமிக்கின்றன. ஆகவே ஆறறிவுள்ள மனிதன் தாம் அஞ்சி இரக்க முள்ள இறைவனிடத்தில் நன்றியுள்ள மனித னாய் ஈமானோடு வாழ வேண்டும்.

ஆரம்ப காலம் இறைவன் தனது சமூகத்தை நல்வழிப்படுத்த நபிமார்களை அவ்வப்போது அனுப்பி வைத்தான். ஆனால் அன்றைய காலத்திலும் அச்சமூகம் தமக்குரிய நபிமார்களை நிரா கரித்து இறைவனுக்கு மாறு செய்த வர்களாக இருந்தனர். அதனால் அன்று குறிப்பிட்ட சமூகம் மாத்திரம் சோதனைக்குள்ளாகி அழிக்கப்பட்டனர். அவ்வப்போது இவ்வாறான குற்றச் செயல்கள் உருமாறும் போது கல்மாரி பொழியப்பட்டது. தண்டனைகள் இறை வனால் கொடுக்கப்பட்டது. அப்ப டியான சம்பவங்கள் அல்குர்ஆனிலும் பல இடங்களில் தெளிவு படுத்தப் பட்டிருக்கின்றது. என்றாலும் இன்று எல்லா வழிகளிலும் குர்ஆன் ஹதீஸ் களை கற்றுத் தெரிந்தவர்களாக இருக்கும் முஸ்லிம்கள் யூதர்களைப் போல் முஸ்லிம்களுக்கு விரோதமாக செயல் படக்கூடியவர்களை நம்பி உறவோடு கைகோர்த்து வாழ்வதுதான் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. இது எவராலும் ஜீரணிக்க முடியாத செயற்பாடாகவும் உள்ளது. சிலை வணங்கிகள் சாபம் விட்டிருக்கும் போது இறை கட்டளைகளை நிராகரித்து வந்தவர்களோடு உறவு கொண்டு அவர்களின் பொருளாதார விட யத்தில் தம்மை ஈடுபடுத்தி ஹராமான முறையில் சம்பாதித்து அவர்களாக தமது ஈமானை பழுதுபடுத்தும் விடயத்தில் இஸ்லாமியர்கள் உடந்தையாக இருப்பது கருணையாளனின் கோபம் சோதனைகளாக மாறி வேதனைகளை தரவல்லது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் நாட்டில் அவ்வப்போது பயங்கரமான இயற்கை அழிவுகள் ஏற்படுகின்றது இப் ஒபோது பார்த்தும் அனுபவித்தும் வருகின்றோம். ஆனாலும் இப்படியான நிகழ்வுகள் நிறைய அழிவுகள் தந்து, மாறா வடுக்களை தந்தாலும் திருந்துவார் யாரும் இல்லை. ஆகவே ஒரு முஸ்லிம் தமது இறைவன் கட்டளையினை ஏற்று எம்மை நல்வழிப்படுத்த வந்த இறுதித் தூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரத்தை ஏற்று ஈமான் உள்ள உண்மை முஸ்லிமாக வாழ்வோமேயானால் நிச்சயமாக இவ்வாறான அழிவுகளில் இருந்து எம்மையும், எமது உயிர், உடை மைகளையும் எதிர்கால சந்ததிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எதிரிகளால் சந்ததிகளின் ஈமானியத தையும் அவர்களையும் பாதுகாக்க ஏதுவாக வழிகள் கிட்டும் என்பது உறுதியே! ஆகவே படைப்புக்கள் அனைத்தும் படைத்தவனுக்கே சொந்தமானது. அவன் நாடியவற்றில் உறுதி யாகவும், உறுதுணையாகவும், இரக்க மாகவும், கோபமாகவும் இருப்பது காரண காரியங்க ளால் வெளியாகுவது ஆகும். ஆகவே இயற்கையில் நடைபெறும் யாவும் இறைவன் பால் நடைபெறுகிறது. அதுவும் காலத்தை முன்வைத்து கழாக் கதிரோடு நகர்கின்றது. இதனை மனதில் நிறுத்தி செயல்படுவோமேயானால் வெற்றியாளராக ஆகிவிடுவோம். என்பது திண்ணம்.

போனும் ஒரு போதைதான்

போதையில் இருக்குமொருவனின் நிலை எதுவென்று நம் அனைவருக்கும் தெரிந்தவொன்றுதான் இருந்தாலும் ஒரு ஞாபகப்படுத்தலுக்காய் ஒரிரு நடை முறைகளைக் கூறலாம். குடிபோதையில் இருப்பவனுக்கு இன்னும் இன்னும் குடிக்க வேண்டுமென்ற ஆவல் இருக்குமே தவிர சுற்றி என்ன நடக்கிறதென்பது தெரியாதிருக்கும். காசை அதற்காக இறைப்பானேயன்றி காத்திரமான எந்த முயற்சியிலும் ஈடுபடாதிருப்பான். தனக்கு தடங்கலாக இருப்பவருடன் சண்டை செய்வதோடு நின்று கொள்ளாமல் எந்தப் பொருளுக்கும் உயிருக்கும்கூட அவனிடம் மதிப்பிருக்காது. இப்போதை வஸ்துப் பாவனையாளர்கள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அதற்கு தண்டனை வழங்கப்படும்.

ஆனால் குற்றமென்று அறியப்படாத வொன்று போதை என்று தெளிவில்லாதவொன்று சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படாதவொன்று எம்மில் மெல்ல மெல்ல ஊடுருவி எம்மை கட்டி வைத்திருக்கிறது. அதனோடு ஒன்றித்து அது இல்லாமல் எமக்கு வாழவே முடியாதென்ற ஓர் நிலை எம்மை ஆட்டிப் படைக்கிறது. அதுதான் “போன்” எனும் போதை.

காலையில் எழுந்ததிலிருந்து இரவு தூங்கப்போகும்வரை இதன் வகிபாகம் குடும்பத்தில் நலவைச் தருகிறதோ இல்லையோ கெடுதியை குழப்பங்களை கொட்டிக் கொண்டிருக்கிறது. காலையில் எழுந்தவுடன் அன்பான மனைவி முகத்தில் விழிக்க வேண்டியவன் அந்த நாளை போனுடனே தொடங்குகிறான். மனைவி பிள்ளைகளின் குரல்களை செவிமடுக்க நேரமில்லாது, அவர்களுடன் சிரித்துப் பேச நேரமில்லாது வெளியே இருந்து பார்க்குமொருவனின் கண்களுக்கு ஒரு பைத்தியக்காரனைப் போல் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருக்கிறான். இதனால் செய்வதறியாது

மனைவி பிள்ளைகள் மன உளைச்சலுக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். அதே போன்று சில மனைவிகளின் நிலைமையும் மிக மிக மோசமாகிக் கொண்டிருப்பதனை கண்கூடாக கண்டு கொண்டிருக்கிறோம். உணவு சமைக்கும்போதும், உணவுண்ணும் போதும், தன் குழந்தைகளுக்கு உண வூட் டும் போதும் போனையே பார்த் துக் கொண்டிருப்பதனால்தான் எதிர்விளைவுகள் ஏற்படுகின்றன.

வீட்டின் அமைதியைக் குலைத்து கணவ னின் கோபத்திற்கு ஆளாகி ஒவ்வொரு நாளையும் சண்டை சச்சரவுகளால் அனர்த்த மாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

பிள்ளைகளும் இவர்களுக்கு சளைத்த வர்களா நாம் எனும் போக்கிலேயே காரிய மாற்றுகின்றனர். காலை விடிந்ததி லிருந்து கண்மூடித் தூங்கும்வரை தாயின் "போனை" எப்படி எடுப்பது தந்தையின் "போனை" எப்படி எடுப்பது அதை அவர்களுக்கு தெரியாமல் எப்படிப்பார்ப்பது என்ப னவற்றில் உஷாரகவே இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைப்பருவத்திலிருந்தே தொட்டதும் பளிச்சென மின்னும் அதன் அழகில் மயங்கியதால் ஏற்பட்ட மோகம் சற்றும் குறைவில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எது தேவை? எது தேவையற்றது? என்பதனை அறியாது எது காட்சியளிக்கிறதோ அதனைப்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இன்னும் சில பிள்ளைகள் புதிய விளை யாட்டுக்களை தரவிறக்கம் செய்து தங்கள் தூக்கத்தைக் கெடுத்து தந்தையின் பணத்தை திருடி "ரீலோடுக்கு மேல் ரீலோட்" செய்து விளையாடி தங்கள் வாழ்வை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனைத் தடுக்க முற்படும் போது தங்க ளுக்கு என்ன நடக்கிறதென்பதே அறியா மல் வீட்டையே யுத்தகளமாக்கிக் கொண் டிருப்பார்கள். பெற்றோர் இதன் பாரதூ ரத்தை சிந்தியாது "போன்" தானே என விட்டவழி இவர்களை இவ்வளவு தூரத் திற்கு கொண்டு சென்றிருக்கிறது.

சில நலவுகள் இருந்தாலும் அது அளவோடு இருக்கும்வரைதான் சிறப்பு. தேவைக்கு மாத்திரமென்று வாங்கப்பட்பது தேவையில்லாததிலும் நம்மை நுழைய வைத்து அது இல்லாமல் வாழவே முடியா தெனும் ஓர் போதை நிலைக்கு நம்மை கொண்டுவந்திருக்கிறது.

அண்மையில் "கேஸ்" அடுப்பு எரிந்து கொண்டிருக்கும்போது போன் அருகே இருந்ததனால் சமையலறையே வெடித்துச் சிதறிய ஒரு செய்தியை நாம் ஊடகங்களின் வாயிலாகஅறிந்துகொண்டோம். போனைப் பார்த்துக்கொண்டே வண்டி ஓட்டியதனால் போனைப்பார்த்துக்கொண்டே நடந்தத னால் என பலபோது விபத்துக்களை சந்தித்தவர்களை நன்கறிந்திருக்கிறோம்.

போதை தரும் விடயங்களாக ஒரு சிலதை பட்டியல்படுத்தியிருக்கும் நாம் அதனிடமிருந்து தப்பிப்பதற்காக கரிசனை எடுத்துக்கொள்ளும் நாம் எமக்குத் தெரி யாமலே எம்மை விலங்கிட்டு வைத்தி ருக்கும் இந்த போனின் போதை யிருந்து எப்போது மீள்வது? அதனை எப்படி பயன் படுத்த வேண்டுமென்பதை எப்போது அறிவது? சற்று சிந்திப்போமானால் இந்த போன் போதையிலிருந்து தூரமாகி நமது குடும்பத்தின் உன்னத நிலையைப் பாது காக்கலாம்.

நுஸ்ரா லியாகத் அலி
(என்.நூர்)
தர்கா நகர்.

யொகாரி சட்டகம் (Yohari window)

ஜெனிதா மோகன்
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் , கல்முனை

யொகாரி எனும் உளவியலாளரினால் முன்வைக்கப்பட்ட மனிதன் பற்றிய நான்கு பக்கங்க பக்கங்களை உள்ளடக்கிய சட்ட கம் என்பதால் இது யோகாரி சட்டகம் எனப்படுகிறது.

அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் நான்கு பக்கங்கள் உண்டு. அதனை யொகாரி எனும் உளவியலாளர்

1. குருட்டு மூளை
2. இருட்டு மூளை
3. திறந்த மூளை
4. மூடிய மூளை என்று நான்காக பிரித்து பல்வேறு கருத்துக்களை முன்வைக்கிறார்.

அதாவது எனக்குத் தெரியாதது மற்றவருக்கு தெரியுமாக காணப்படும் நிலை குருட்டு மூளை என்றும் எனக்கும் தெரியாது மற்றவருக்கும் என்னை தெரியாது என்பதை இருட்டு மூளை என்றும் திறந்த மூளை என்பது எனக்கும் என்னை தெரியும் மற்றவருக்கு என்னை தெரியும் எனும் நிலையாகும். மறைக்கப்பட்ட மூளை என்பது எனக்குத் தெரியும் மற்றவருக்கு தெரியாது எனும் வகையில் நான்கு பக்கங்களை ஒவ்வொரு மனிதனும் கொண்டுள்ளார் என்று கூறுகிறார்.

அதாவது எனக்கும் தெரியும் மற்றவருக்கு என்னை தெரியும், எனக்குத் தெரியாதது மற்றவருக்கு தெரியாது, எனக்கு தெரிந்தது மற்றவருக்கு தெரியாதது, எனக்கும் தெரியும் மற்றவருக்கும் தெரியும் என்பது போன்ற விடயங்களை இந்த சட்டகம் ஊடாக தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

மனித மூளையின் ஏழு வீதம் தான் மனிதர்கள் உபயோகிக்கின்றனர் என்றும் 93 வீதமானவை உபயோகிக்கப்படவில்லை என்பதும் விஞ்ஞானிகளின் கருத்து ஆகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இரகசியங்கள் காணப்படும் அது மறைக்கப்பட்ட மூளை ஆகும். இந்த இரகசியமங்களை மற்றவர்கள் அறியும் போது சோற்றினை ஒரு மடுவினில் போட்டு மூடிய பின் குறிப்பிட்ட காலங்களுக்கு பிறகு அந்த இடத்தில் ஒரு குழியினை தோண்டும் போது தூர் நாற்றம் வீசும். அது போன்று மறைக்கப்பட்ட சில இரகசியங்கள் வெளியில் வரும்போது அது அவருக்குரிய வாழ்க்கையை பாதிக்கும். எனவே இரகசியங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் மறைக்கப்பட்டு காணப்படுகிறன. அந்தரங்களை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தும் போதுதான் அதிகமான தற்கொலைகள் இடம் பெறுவதனை சமூக ஊடகங்களின்



ஊடாகவும் அறிய முடிகிறது. காரணம் தெரியவில்லை என்று கூறப்படும் தற்கொலைகளுக்கும் இரகசியங்கள் அம் பலமாகி விடுமோ என்ற அச்சங்களும் காரணமாக இருக்கலாம்.

திறந்த மூளை என்பது எனக்கும் என்னை தெரியும் மற்றவருக்கும் என்னை தெரியும், எனக்குத் தெரியாதது மற்றவருக்கு தெரியும் என்பது குருட்டு மூளை ஆகும். எனக்கும் தெரியாது மற்றவருக்கும் தெரியாது இருட்டு மூளை ஆகும். மறைக்கப்பட்ட மூளையானது எனக்குத் தெரியும் மற்ற வருக்கு தெரியாதது ஆகும்.

திறந்த மூளை அல்லது மறைக்கப்பட்ட மூளையிலிருந்து நாங்கள் வேலை செய்ய தொடங்க வேண்டும். திறந்த மூளை எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்கும். மறைக்கப்பட்ட மூளையிலிருந்து நாங்கள் எமது பணியினை தொடங்க முடியும். இடம், பொருள், ஏவல் பார்த்து கதைப்பதற்கு தொடங்க வேண்டும்.

எனக்கும் தெரியாது மற்றவருக்கும் தெரியாது இருக்கும் மூளை மறைக்கப்பட்ட மூளை ஆகும். இந்த மறைக்கப்பட்டிருக்கும் மூளையில் திறமைகள் அடிமனதில் ஆழமாக இருக்கும் போது சந்தர்ப்பங்கள் அல்லது தேவைகள் வரும் போது இருவருக்கும் தெரியாத புதிய திறமைகள் வெளிப்படும்.

ஒரு மனிதனுக்கு திறந்த மூளை அதிக மாகவும் குருட்டு மூளை குறைவாகவும் மறைக்கப்பட்ட மூளை குறைவாகவும் இருட்டு மூளை மறைக்கப்பட்ட மூளை அளவும் காணப்படும் போது அவருடைய வாழ்க்கை மிகவும் நன்றாக அமையும்.

எப்போதும் ஒத்துணர்வுடன் ஒருவரது பிரச்சினைகளை நோக்கும் போது எங்களை அவர்களது இடத்தில் வைத்து பார்க்க வேண்டும். அப்போதுதான் தனக்கு அந்த பிரச்சினை என்றால் அதனை எப்படி பார்ப் பேன். அதனால் எத்தகைய தாக்கத்தை எதிர் கொண்டு இருப்பேன், எத்தகைய மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பேன் என்று நினைத்தால் மற்றவருக்கு எத்தகைய வழிகாட்டிகளை செய்ய முடியும் என்ற எண்ணம் வரும். எனவே அனுதாபம் காட் டுவதை விட ஒத்துணர்வு ஊடாக நோக்குதல் நன்றாக இருக்கும்.

அழகுக் குறிப்புக்கள்

1. இன்று எமது பெண்களிடம் கேள்விக் குறியாக உள்ள பிரச்சனைதான் தலை முடிக்கு கடையில் வாங்கும் டை அடிக்க லாமா இனி அந்தக் கவலை வேண்டாம். இதோ......

   50 கிராம் கருஞ்சிரகம்

   50 கிராம் கறி வேப்பிலை

இரண்டையும் தனித் தனியாக கருகும் வரை வறுத்தெடுத்தெடுத்து மிக்சியில் இட்டு மா போல் அரைத்தெடுத்து சுத் தமான தேங்காய் எண்ணெயில் குழைத்து தலை யில் நன்கு பூசி அரை மணி நேரம் கழிந்த பின்னர் குளிக்கவும்.

2. முகத்தில் உள்ள தோல்களுக்கு சத்தும் பளபளப்பும் ஏற்பட தினமும் அரிசி கழுவு முன் சிறிதளவு நிரை விட்டு அதனை நன்கு பிசைந்து அந்நீரால் முகத்திதை கழுவி சிறிது நேரத்தின் பின் நல்லநீரால் கழுவி விடுங்கள். அடுத்ததாக நிங்கள் உண்ணும் வாழைப்பழம் அப்பில் போன்ற வற்றின் ஒடு சிறு துண்டை முகத்தில் பூசி அரைமணி நேரத்தின் பின் கழுவி வரும் பழக்கத்தை வைத்துக் கொண் டால் முகம் பொலிவாக வரும்

அஜீரா கலீல்தீன்

காத்தான்குடி

உங்கள் கைகள், கால்கள் மிகவும் கறுப்பாக இருக்கிறதா?

தேவையான பொருட்கள்

உருளைக்கிழங்கு : ஒன்று

காபி தூள்; (cofee powder) : ஒரு கரண்டி

அரிசி மாவு : ஒரு கரண்டி

தலைக்கு தேய்க்கும் ஏதாவது ஷாம்பூ (Shampoo)

செய்முறை:

உருளை கிழங்கை தோல் நீக்கி துறுவி அதன் சாறை நன்றாக பிழிந்து எடுத்துக் கொள்ளவும் .பின்பு ஒரு சிறு பவ்ளில் காபி தூள் ஒரு கரண்டி, அரிசி மாவு ஒரு கரண்டி, இறுதியாக தலைக்கு தேய்க்கும் ஷாம் பூவையும் சேர்த்து நன்றாக ஒரு பேஸ்ட் வரும் வரை கலக்கி அதை உங்கள் கை, கால்களில் தடவி ஸ்க்ரப் செய்ய வேண்டும்.

ஒரு முறை பயன்படுத்தியவுடனே மாற் றத்தை காணலாம் உங்கள் முகத்தை விட கை , கால்கள் பொலிவாக இருப்பதை

றிஹானா ஹரிஸ்கான்

கண்டி, தெல்தோட்டை

விசேட நன்றி நவிலல்

2025.01.05 ல் திருகோணமலை ஜுபிலி மண்டபத்தில் நடைபெற்ற எமது நான்காவது மாநாட்டிற்கு நிதி மற்றும் பிரின்ட் சிற்றுண்டி நீர் அனுசரணை நல்கிய இவர்களுக்கு எமது அமைப்பு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

J M இஹ்ஸான். (Mutur JMI Organizotion பணிப்பாளர்)
தமிழ் நெஞ்சம் அமீன் பிரான்சு
திருகோணமலையைச் சேர்ந்த
A R M அஜ்வத்-கூகுள் பென்சி.
A M அப்துல்லா-டிரெஸ்ட் ரேடர்ஸ்.
M J M பவாஸ்.-ரோயல் ஜுவலரி.
S M பஸ்லான்-சம்கூன் பேக்கரி.
அல்ஹாஜ் P. M.M இர்பான்.
ஜுவலிமா ஜுவலரி.

2020.01.05 ல் திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்ற SRILANKA PEN CLUB இன் 2024 க்கான நான்காவது மாநாட்டில் "பெண்ணென்னும் பேராறு" தலைப்பில் நடைபெற்ற கவியரங்கின் நினைவுகள்

2020.01.05 ல் திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்ற SRILANKA PEN CLUB இன் 2024 க்கான நான்காவது மாநாட்டில்